

# ஒரு மெல்லிய தீபாராதனை...



உள்ளிக்கோட்டை

சந்திரசேகரன் காமாட்சி MCA

*@2020,All Rights Reserved To Author*

# என்னுரை

காதலுக்குள்ள சிறப்பு என்னவெனில் அதுபற்றி எழுத காதலிக்கவேண்டிய அவசியமில்லை! லட்சம் கவிஞர்கள் எழுதிவிட்டர்கள். புதிதாத எழுத எதுவுமில்லை.; சமையலில் எப்படி ஒவ்வொரு பெண்ணின் கைப்பக்குவமும் ஒரு மாதிரியோ அதுபோல என் காதல் பார்வையும் ஒருவகை என்பதால் மட்டுமே எழுதியுள்ளேன். மற்றபடி அதே நிலவுதான்; அதே பூக்கள்தான்..அதே மார்கழிதான்!

தனிமை, ஞானம், விவாகரத்து,ஜாதி,மதம்,கடவுள் தேடல்,மனிதர் தேடல்,இப்படி மற்றவை பற்றியும் தெரிந்தவரை கிறுக்கியுள்ளேன். எழுத்துக்கள் அழிந்துவிடும்;படைப்புகள் மட்டிலுமே பாதுகாக்கப்படும் என்பதை அறிவேன். அறிந்தே எழுதியுள்ளேன். நான் விமர்சிக்கப்படலாம்,வெறுக்கப்படலாம். எப்படியாயினும் படைப்பாளி வேஷம் போட்டபிறகு எல்லம் எமக்குப் பொதுவே.

படைப்பாளி என்பவன் சூரியக் கதிர்வீச்சுப் போல பொதுவான கருத்து வீசல் கொண்டவன்; எல்லா வக்கிரங்ககளையும் இழுத்துக் கொண்டு நதிபோல ஓடிக்கொண்டிருப்பவன்; மனிதம் ,இயற்கை என்றவற்றை மட்டிலுமே எட்டிப் பார்ப்பவன்; நாத்திகன் , ஆத்திகன் , மதவாதி,அரசியல்வாதி, என எந்தக் கட்டுக்குள்ளும் அவனை வைத்துப் பார்க்க வேண்டியதில்லை.;ஆனால் நீங்கள் விமர்சிக்க உரிமையுள்ளவன்.!

யாசிக்காது வாங்கி வாசிக்கும் உங்களுக்கும் ,முகவுரை தந்த அன்பு நெஞ்சங்களுக்கும் நன்றிகள் கோடி!! படித்துவிட்டு, நீங்கள்தான் கூறவேண்டும் நான் படைப்பாளியா அல்லது வெறும் எழுத்தாளியா என்று.

ப்ரியங்களுடன்,

**K.சந்துரு.**

@2020,All Rights Reserved To Author

## சமர்ப்பணம்

என்னை உலகு கொண்டுவந்த என் பெற்றோர்

====================================================================

**உள்ளிக்கோட்டை**

திரு.வேலார்த்த.ம.காமாட்சி (மறைவு)

(Ex-Battalion ,Indian Army ,Avadi Unit –1944)

திருமதி.தையல் நாயகி காமாட்சி (மறைவு)

====================================================================

*@2020,All Rights Reserved To Author*

நன்றி



நான் தூக்கி எறிந்த கவிதைகளை பொறுக்கி எடுத்து இத்தனை காலம் சேர்த்து பாதுகாத்து வைத்திட்ட

==================================================================

**என் ஆருயிர் . அன்புத்தம்பி .உள்ளிக்கோட்டை.**

**வேலார்த்த. கா.மூர்த்தி DCA,**

[Construction. Supervisor, Al Sirawi Co. LLC, UAE]

==============================================================

*@2020,All Rights Reserved To Author*

இவர்கள் தந்தைக்குப் பின் நான் இருண்ட வாழ்வைக் கடந்து வெளியேற நான் கண்டு எடுத்த களங்கரை விளக்குகள்..நான் கொஞ்சமேனும் சிரித்த காலத்துக்குச் சொந்தக்காரர்கள்..

.என்றும் நினைக்க வைக்கும் சம்பளத்தையும் , உணவினையும் மீறிய இவர்களது அன்பும் அரவணைப்பும் ! என்றும் இனிக்கும் அக்கால நினைவுகள்...!

1.Dr.சேகர்,BSc., (Registered Medical Practitioner & Shotokan karate Trainer )

லெட்சுமி மருந்தகம் , உள்ளிக்கோட்டை(1989)

2.திரு.ராஜசேகர் & ராஜா (LIC, Agents, Mannargudi) (1992)

3.திரு.ம.பாண்டியன்(ம.தி.மு.க ,UKT) / திரு.சாமி நாதன் (Pharmacist (G.H, MNG), Makadevappattinam) / திரு.சிற்றரசு(UKT) / திரு.அய்யப்பன்(UKT) சுகம் மெடிக்கல்ஸ் உள்ளிக்கோட்டை(1993-94)

4. அன்பு அண்னன்.திரு.பாண்டியன்,(மறைவு)கண்டிதம்பேட்டை

Dr. D.சேகர் , MD,DCH Mannargudi / திரு.D.துரை

மலர் மெடிக்கல்ஸ், மன்னார்குடி (1994-1998)

5. அன்பு அண்னன்.திரு.V. பாண்டியன்,ஆலங்கோட்டை &

அன்பு அண்னன்.திரு.V.குமணன்,ஆலங்கோட்டை

அன்னை மெடிக்கல்ஸ், மன்னர்குடி(1998-2002)

6. அன்பு அண்ணன்.திரு. பொன்.வாசுகிராமன்,பரவாக்கோட்டை

கீதாஞ்சலி மெடிக்கல்ஸ், மன்னர்குடி(2003)

7. திரு.மோகன்,MBA, பரவாக்கோட்டை(பிரகாசம் மெடிக்கல்ஸ்(2003-2005)

8. பத்மஸ்ரீ. Dr. P.V.A. மோகன்தாஸ்,MD, Ortho

& திருமதி.மல்லிகா மோகன்தாஸ் - **Miot Hospitals , Chennai** (2006-2011)

9.திரு. பீட்டர் ரவீந்திர குமார் பால் MS IT USA ( Saram infosystems, Chennai ) 2011-17

10. திரு.போர்ஜியா சூசை, MBA , ,(Sedna space Technology, Chennai)

11.திரு.முத்தழகு (மாஸ்ட்டர்) அவர்கள், சென்னை.

12.திரு.பாலாஜி, கிராபிக்ஸ் டிசைனர், பிரசாத் ஸ்டுடியோ,சென்னை

13.திரு.ஜெய் கணேஷ் ,Ex-Programmer , Miot Hospitals, Chennai

*@2020,All Rights Reserved To Author*

# முகவுரை

திரு.கு.விவேகி,உரிமையாளர் , ஹட்சன் டெய்லி, உள்ளிக்கோட்டை



காதல் கவிதை வழியேகூட சமூக மூட வழக்கங்களை சாடியுள்ள பக்குவம் அருமை . உதாரணமாக

*"சூரியன் இறந்ததும் தேர்தலேயின்றி உன் அழகிய பார்வை ஆட்சிக்கு வரவேண்டும்...*
*பேரிடர் ஜாதிகள் கொலையுண்ட வழக்கில் உன் வெட்கிய கன்னங்கள் சாட்சிக்கு வரவேண்டும்"*

------ *என்று ஜாதியினை மறுப்பதும் அடுத்து "பெங்குவின் உலகில் விவாகரத்து இல்லை" என்று விவாகரத்து பற்றிச் சாடியுள்ளதும் , பிறகு*

"குஞ்சு பொறிப்பதற்கு முன்பு அந்த முடிவினை எடுங்கள்." என்று தீர்ப்பு சொல்வதும் சிறந்த வரிகள்.

மதம் மற்றும் போர் வீண் என்பது பற்றி," ,*நாம் கைகூப்பிக்கும்பிட்டாலும்; மண்டியிட்டுத் தொழுதாலும் மார்பில் குறியிட்டுக் கொண்டாலும் நம் கண்களுக்கு தெரிவது என்னவோ ஒரு சூரியன் தான் "*
என்பதும் நல்ல அழுத்தமான வரிகள்!

குடுகுடுப்பைக்காரன்- கவிதை ஒரு மழலை தன் சிறு வயது பயத்தினை , அனுபவத்தினை அப்படியே நம் வாழ்வில் நடந்த ஒன்றினை கூறுவது போல இருப்பது அழகு!

பொருளாதாரம் பற்றி கூட பணம் செய்யும்போது சேமிக்கவேண்டும் என்பதை

"இப்படி எரியும்போதே சில தீக்கட்டிகளை எடுத்து பத்திரப் படுத்திக் கொள்ளவேண்டும்" என்று பதமாகக் கூறியுள்ளார்.

மொத்ததில் , ஒரு மெல்லிய தீபாராதனை-
நல்லதொரு சமூக சீர்திருத்த, காதல் கவிதைத் தொகுப்பு .

வாழ்த்துக்கள் !

@2020,All Rights Reserved To Author

## முகவுரை


திரு.வேல்செல்வம் அன்புமணி BE,MBA

CEO,Peru Technologies,Chennai.




இனிய நண்பர் சந்துரு அவர்களுக்கு,

நாய்களின் பன்முக தன்மைகளை கூறி வைத்திருந்தேன். மேலும் அதனை நகைச்சுவையாக நாய்களின் கதை தொகுப்புகள் அடங்கிய "ஒரு மெல்லிய திப்பாரதனை" வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் ஒவ்வொரு வரிக்கும் அழகிய காதலை வாழ்க்கையோடு ஒப்பிட்டு கூறிய விதம் மிகவும் அருமை. அதனிலும் ஒவ்வொரு வார்த்தையும் அந்த காலகட்டத்துக்கு பொருந்தும் வகையில் அமைக்கப்பெற்று அதனை ரசிக்கும் வகையில் கொடுத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

இத்தகைய நாய்களின் முயற்சிகள் யாவும் வெற்றி பெற்று மென்மேலும் சிந்தனையாளன் தன் வரிகளால் [illegible] தங்களின் [illegible] எந்த ஐயமும் இல்லை. தங்களின் ஒவ்வொரு முயற்சியும் இந்த [illegible] அகத்தில் நிலைத்து நிற்கும் வரவேற்பையும் ஏற்படுத்த என்னுடைய வாழ்த்துக்கள்

நன்றிகள் கோடி

வாழ்த்துக்கள்

அ.வேல்செல்வம்

# முகவுரை

## திரு.சோம.அழகிரி.,Bsc,TNCSC, Chennai

சமூக நாடக ஆசிரியர் கூப்பாசிக்கோட்டை



எப்படியும் வாழலாம் என நினைப்பவர்கள் மத்தியில் இப்படித்தான் வாழவேண்டும் என இலக்கணம் கூறிய கவிஞரின் சமூக நாடகத்தின் முதல் வரிசை பார்வையாளனாக இருந்த என்னை நாடக ஆசிரியராக பயிற்சி அளித்த பெருமைக்குறியவர் இந்த கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் எனது நெடுங்கால நண்பர் "சந்துரு"

கவிஞரின் முண்ணனி வாசகர்களில் முதன்மையானவன் நான் . கவிதைத் தொகுப்பின் பிரதி பார்த்தேன்."ஒரு மெல்லிய தீபாராதனை..." மீண்டும் பார்தேன்..தீபாராதனையா? தீபா ..ஆராதனையா? என யோசித்தவாறு ,கவிஞரின் கைவண்ணத்திலும் தீபாராதனையா என யோசித்தவாறு வாசித்தேன்...வாசித்த வேளையில் ...

*"ஒரு கட்டுப்பாடே இல்லையா இந்த மனிதரிடம்*
*இனி இவர்களை நம்புவதாயில்லை என்றார் கடவுள்*
*உங்களுக்குத் தெரியாமலா எல்லாம் நடக்கிறது -இனி*
*உங்களை நம்புவதாயில்லை என்றேன் நான்.."*


என்கிற வரிகள் படித்து காதல் கவிதையிலும் கொள்கை பேசும் கவிஞரை கோபுரமாய் உணர்ந்தேன்..தவறாய் யோசித்தமைக்கு மன்னிப்பு கேட்டு மீண்டும் வாசித்தேன்..

நிலா அழகு என்று காட்டிய கவிஞர்கள் மத்தியில் நிலாவை அழுக்காக்கிய புதிய கவிஞராய் மிளிர்கிறார்

வாழ்க்கை எனும் கவிதையில் "கோவில் சிலைகளிடம் சோகம் கொட்டிவிட்டு வாழத்தான் வேண்டியிருக்கிறது" என்ற வரிகள் படிக்கும் போது ,சோகம் கொட்ட மட்டுமல்ல. சுய நலம் தேடும் மனிதர்களின் சுயரூபத்தை எனவும் காட்சிப்படுத்டுகிறார்.

ஒவ்வொரு கவிதையையும் மன எண்ணங்களை எழுத்துக்களாய் வார்த்து "ஒரு மெல்லிய தீபாராதனையை" உயிரூட்டியுள்ளார். இல்லை...இது இனிய தமிழுக்கு கருவரையில் நின்று காட்டிய தீபாராதனையாய் உணர்கிறேன்.இதனை வாசிக்கும் நீங்கள் சுவாசிப்பீர்கள் என நம்புகிறேன்.கவிஞருக்குக் கை கொடுப்போம்..பாராட்ட அல்ல..கரம் பிடித்துத் தூக்கிவிட ...காலம் பாராட்டும்..கவிதை கடல் கடந்து பரவும் என நிறைவாக நம்புகிறேன்

-என்றும் அன்புடன் **சோம.அழகிரி**,Bsc, TNCSC, Chennai



@2020,All Rights Reserved To Author

# முகவுரை

## திரு. கோ.கனிவளன்



அன்பு நண்பர் சந்துரு பல ஆண்டுகளாக
கதைத் துறையில் கவிதைகள், நாடகங்கள்
என பயணித்து வந்தாலும்... அவரது
தொலை நோக்கு பார்வைகளில் இதுவும்
ஒரு "மெய்யில தீய ஆராதனை" கவிதை
தொகுப்பு மேம்பட்டிய காலத்திற்கு ஏற்ற
முறையில் வடிவமைத்து தருவது மிகவும்
அற்புதம்... இலக்கிய பயணம் இனிதே
தொடர என் உளங்கனிந்த வாழ்த்துகளோடு

என்றும் அன்புடன்,
கனிவளன்

@2020,All Rights Reserved To Author

# முகவுரை

## திரு.யு.எஸ்.பொன்முடி,Bsc., தமிழ் நாடு அறிவியல் இயக்கம்

## கூப்பாச்சிக்கோட்டை



நண்பரின் கவிதைகள் மிகவும் அருமை. ஒரு மெல்லிய தீபாராதனை கவிதைத் தொகுப்பு வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

-அன்புடன் யு.எஸ்.பொன்முடி,Bsc.,

தமிழ் நாடு அறிவியல் இயக்கம்

கூப்பாச்சிக்கோட்டை

@2020,All Rights Reserved To Author

## வாழ்த்து- திரு.டாக்டர்.கேசவன் MBBS,D.Ortho,Chennai

My Hearty wishes to **Mr.Chandru** to get success in all his endeavors in Life!

A Single youth knowing all kind of knowledges like Medicines, Computers and Programming and Poetical talent is really admirable !

Greeting for his this Book Publishing Attempt and again wishes to write more to make Reformation in the society!

Regards,

***Dr.Kesavan*** *, MBBS, D.Ortho,*

*Nandhanam , Chennai.*

*@2020,All Rights Reserved To Author*

# வாழ்த்து

## திருமதி.டாக்டர்.ஒமனா ட்ரன்ட்ஸ் & குடும்பத்தினர்

Research Head, Bone Marrow Transplantation , Zurich, Germany)

Hi All !

We don’t know Tamil … but know Mr. Chandru ,the techie, He is a person who always dedicated to work and vast knowledge in Programming.

All we need him to support for our image manipulation work and system troubleshooting and network issues in a computerized environment at Miot Hospitals, Chennai , but really having glad to know his another poetical personality !

He did so many support to us for our research work set up (LAN & WAN). We could not read this Tamil poems and understand all , if he translate in to Malayalam then there me be chance ! Anyway I congrats for his bright future on behalf of our family ! Our Love and Wishes always to him!

Regards,

***Dr.Omana Trendz ,***

*Zurich , Germany*

*@2020,All Rights Reserved To Author*

## நன்றி

என்னை கவிஞனாகவும் இரு என்று அரவணைக்கும் என் இனிய நட்பு மற்றும் உறவு வட்டங்கள்

==========================================================

திரு. பீட்டர் ரவீந்திரகுமார் பால் [,MS IT HONS, USA]

[முன்னாள்.முதண்மை மேலாளர், தகவல் தொழில் நுட்பத்துறை, மியாட் மருத்துவமனை, சென்னை]

திரு. வேல்செல்வம் அன்புமணி,BE ,MBA,

[நிறுவனர், பெரு டெக்னாலஜி,(Peru Technologies, Olympia Tech Park) சென்னை)

Mrs. Omana Trendz,

Chief, Bone Marrow Transplantation Research , Zurich, Germany]

திரு.ரெங்க.அசோகன்,& ரவி கூப்பாசிக்கோட்டை

திரு.பாலாஜி-நவசக்தி அவர்கள், மேட்டுப்பாளையம்

திரு.மா.ரமேஷ்-ஜான்ஸிராணி அவர்கள் (பரவை),

(supervisor, Pharma Networking ,United Kingdom]

திரு. ஜெ.அப்துல் முஹமது-கார்த்திகா (கூத்தா நல்லூர்)

திரு.அ. பால்வண்ணன் அவர்கள்

(உரிமையாளர்,சுகம் மருந்தகம்,உள்ளிக்கோட்டை)

திரு. ரெ.அன்புச்செல்வம், அவர்கள்

(உரிமையாளர்,கோமதி ஆட்டோ ஸ்பேர்பார்ட்ஸ்,உள்ளிக்கோட்டை)

திரு.கு.காமராஜ், அவர்கள் ,தெற்குத்தெரு,உள்ளிக்கோட்டை

திரு.கு.வீரமணி.அவர்கள், தெற்குத்தெரு,உள்ளிக்கோட்டை

திரு.உமா நாத்,B.Pharam., அவர்கள்

( உரிமையாளர்,,ராஜேந்திரன் மருந்தகம் & மளிகை உள்ளிக்கோட்டை)

@2020,All Rights Reserved To Author

## நன்றி

என்னை கவிஞனாகவும் இரு என்று அரவணைக்கும் என் இனிய நட்பு வட்டங்கள்

==========================================================================

திரு.கு.விவேகி ,Bsc., (தமிழ் நாடு அறிவியல் இயக்கம்)

(உரிமையாளர் ,ஹட்சன் டெய்லி,உள்ளிக்கோட்டை)

திரு.தர்மராஜ் முரளி,[UAE]அவர்கள்

(தர்மா ஹார்டுவேர்ஸ், உள்ளிக்கோட்டை)

திரு.ரெ.பாஸ்கரன்

உரிமையாளர் ,பாஸ்கரன் காய்கறி வணிகம்,உள்ளிக்கோட்டை)

திரு.சக்திவேல்,

(உரிமையாளர் ,வீரனார் உணவகம்,உள்ளிக்கோட்டை)

திரு. சோம. ராஜேந்திரன்(தி.மு.க) அவர்கள் கண்டிதம்பேட்டை

அன்பு நண்பர்.திரு.கோ.கனிவளன், அவர்கள்

அன்பு நண்பர்.திரு.சோம.அழகிரி, அவர்கள்

அன்பு நண்பர்.திரு.யு.எஸ். பொன்முடி, அவர்கள்

அன்பு நண்பர்.திரு.டாக்டர்.கேசவன் அவர்கள், சென்னை.

அன்பு நண்பர்.டாக்டர்.லெனின், அவர்கள்,அப்பல்லோ,சென்னை

அன்பு நண்பர்.டாக்டர். சஞ்சய் பாண்டே அவர்கள், மும்பை.

@2020,All Rights Reserved To Author

# ஒரு மெல்லிய தீபாராதனை...



@2020,All Rights Reserved To Author

# ஒரு மெல்லிய தீபாராதனை



நான் காதல் கொண்டதாலும் ,
நீ காதல் கொன்றதாலும்
இந்த கவிதையை
எழுதிக்கொண்டிருக்கிறேன்..

யாருக்கும் படிக்கக்
கொடுக்கப்போவதில்லை
உண்ணக் கொடுத்த உனக்கும்
உண்டு களித்த எனக்கும் தவிர நம் காதலின்
மணமும் ருசியும் வாசிப்பவர் அறியப்போவதில்லை…

நான் எப்போதும்போல் மரத்தடி மணலில்
ஏதோ கிறுக்கிக்கொண்டிருக்க
காற்று வண்டியிலேறி உன்வீட்டு வாசல் வந்துவிட்ட
செத்துப் போன மாட்டின் தோலினை மோதிய
குச்சியின் சப்தம் -
காதலின் நாடியைப் பிடித்து உதட்டைப் பிதுக்கும்வரை-
என் காதல் உயிரோடு இருக்கிறது
என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன்…

மறு நாள் உன் தோழிகள்
மருதாணி இலை பறிக்க வந்தார்கள்…
அரைத்த மருதாணியை அங்கொன்றும் இங்கொன்றுமாய்
என் ராத்திரிகளில் தடவிப்போனார்கள்…
அவை உறக்கம் தொடங்கி
உயிர் நாளம் வரைக்கும் செக்கச் சிவந்தன…

@2020,All Rights Reserved To Author

# ஒரு மெல்லிய தீபாராதனை(தொடர்ச்சி)



உன் **ஜா**தகமும் உன் கணவன் **ஜா**தகமும்போலதான்

நமக்கு மற்ற எல்லாம் பொ**ரு**ந்தியிருந்தன..
நீ தூக்கி எறிந்தவற்றை நான்
பத்திரப்படுத்தி வைத்திருந்தது

**ரா**குவுக்கும் தெரியாது…கேதுவுக்கும் **தெரியாது**…

கடற்கரை , புல்வெளி ,காற்று ஊடுருவும்படி
ஒரு சாண் இடைவெளி என
ஒரு மெல்லிய தீபாராதனை போல்
மேலெழுந்தவாரியான நம் காதல்…
ஒரு இரவு நேர மெய்த்தீண்டல் கூட
இல்லாது போன தரித்தரியம் …
நான்கு சுவற்றுக்கு நடுவில் நாம்
என்றேனும் கூடியிருந்தால் இன்று
எதையோ மறந்தவன்போல உன் வீடுவரை
வந்துவிட்டு திரும்பிபோக மாட்டேனோ…?

வாலிலும் வயிற்றிலும் அடிபட்டு
தலையினை மட்டும் தூக்கிகொண்டு தவழ்ந்து ஊறும் பாம்பாய்
எவ்வளவு தூரம் நகருமென்று தெரியவில்லை
நீயற்ற இந்த பொழுதுகள்…

ஒன்றுமில்லை …
இந்த பிரபஞ்சம் விட்டு அடுத்த

பிரபஞ்சம் போகும்படிக்கு ஒரு **ர**யிலில் **ஜ**ன்னலோ**ர**ம் வேண்டும்..
பசி தூக்கம் எதுவுமின்றி…
உனதந்த நினைவுகளை அசைபோட்டு
ஒரு நெடும்பயணம் எனக்கு வாய்க்கவேண்டும்-
நீ போகிற இடத்தில் கோவில் கண்டால்

வேண்டிக்கொள் **தோழி**..          Ω

@2020,All Rights Reserved To Author

# திரும்பி வரும்போதேனும்....



விட்டு விட்டு எங்கோ போனவனே...
திரும்பி வரும்போதேனும் என்னை
விரும்பியவனாய் வா..

செத்துவிட்டாய் என்றாலும் ஏதேனும்
ஒரு பிறவியில் பட்டாம்பூச்சியாய்
பிறந்து வா; உனெக்கென இந்த பூமி முழுக்கப்
பூவாய் பூத்து நிற்பேன்-புவி அழிந்து
அடுத்த உலகம் தோன்றும்வரை
அப்படியே காத்திருப்பேன்...!
கல்யாணம் வரைக்கும் உன்
தீண்டல்களை வெறுத்தவள்-நீ
இஷ்டப்பட்டுக் கேட்டதையெல்லாம்
வெட்கப்பட்டு தடுத்தவள்...இப்போது
நீ போன தேசம் வரை
முந்தானையை நீட்டிவிட முடியுமா
என்றொரு முட்டாளாய் யோசிக்கிறேன்...

ஆண் அருகிலில்லா நேரங்களில்தான்
பெருமளவு காதல் பெண்ணுக்குப் பெருகிடுமோ?

@2020,All Rights Reserved To Author

Ω

# மறப்பதற்கு வழி தேடி...



ஏன் எனக்குக் காதல் தேவைப்பட்டது
எனத் தெரியவில்லையடா...
அறிவியல் சொல்லுகிற ஐந்து
நிமிட ஹார்மோன் கொதிப்புகள்
அடங்கிய பிறகும் வேறெதற்கோ ஏங்குகிறது மனசு ;
காத்திருந்த நாழிகைகள்...,பிறந்த நாள் பரிசுகள்
உன் கடிதங்கள்...,உன் கவிதைகள் அப்புறம்
உன் அன்பளிப்புகள்...
அத்தனையும் தீயிட்டு எரித்தாகிவிட்டது
நீ தந்த முத்தத்தினை என்ன செய்ய...?

உன் மார்பில் புதையுண்டு கிடந்த நாழிகைகளை
மறக்கவேண்டி நடக்கிறேன்..குளிக்கிறேன்..
இரவில் ,பனியில் உலவி தூக்கமிழக்கிறேன்....
ஆனாலும் மறு நாள் எல்லாக் கோவிலுக்கும்போய்
அந்த நாழிகைகள் மறுபடி வேண்டும் என அர்ச்சிக்கிறேன்!

மூளைப் புத்தகத்தின் நடுவே
எப்பொழுதோ அமிழ்த்துவைக்கப்பட்ட ஒரு
செம்பருத்திப் பூவின் ஹெர்பாரியம் போல உன் நினைப்பு
இன்னமும் காய்ந்து வதங்கிப் போய் கிடக்கிறது!
எடுத்தெறிய மனதின்றி......என்
பிணம் சுடும் வரைக்கும் தேடியபடி இருப்பேனோ
உன்னை மறப்பதற்கான வழியை? Ω

@2020,All Rights Reserved To Author

# நான் மறுபடி உயிர்த்தெழலாம்...



யாரங்கே இவள் வீட்டுக் குடங்களை
மட்டும் ரோஜாப்பூகளால் செய்யுங்கள்..
இவள் பிறந்த தேதிக்குப் பிறகு
பூத்த பூக்களையெல்லாம்
தற்கொலைக்குத் தூண்டிய குற்றத்திற்காக
வலிக்காத ஒரு தண்டனை வழங்குங்கள்
அவள் இதழுக்கு!

என் ரத்த நாளங்ககளில் பனிப் பொழிவிற்குக்
காரணமான அவள் பார்வை மார்கழியினையே
என்னைக் கடந்துபோகும் எல்லா மாதங்களுக்கும்
பெயெரென வையுங்கள்!

என் மரணத்தை மரணம் எனத் தீர்மானித்துவிடாதீர்கள்
அவளை அவள் கால் கொலுசொலி கேட்கும்படிக்கு
என் பிணத்தின் பின்னே நடக்கவிடுங்கள்..
ஒருவேளை நான் உயிர்த்தெழும்ப வாய்ப்புள்ளது....!

பூ பேசாதென்றும்
சிலை சிரிக்காதென்றும் அவளைப் பார்க்காமல்
எனக்குத் தப்பாய் சொல்லித்தந்திருக்கிறான்
என் வாத்தியார்.....! Ω

@2020,All Rights Reserved To Author

# எங்கே அந்த நிலா?



ஒரு அமாவாசையில்
நிலவு செத்துவிட்டதாய் எண்ணி
நட்சத்திரங்கள் கண்ணீர்விட்டன
மழையென;

மேகம் இடி இடி என நெஞ்சில் அடித்துக்கொண்டது;
அவளது வீட்டு வாசலில் தேங்கிய மழை நீர்
படிக்கட்டுகள் வரை சென்று அவள் பாதம் தொட்டுப் பார்த்தன...
நீரில் பிரதிபலித்த அவள் முகத்தை நிலவென
மனதில் எழுதிக்கொண்டன;

பின் தேங்கிய நீர் வடிந்து ஓடி,ஆற்றில் விழுந்து
கடலில் கலந்து, வெயில் பட்டு, ஆவியாகி மேலெழுந்து
மேகங்களில் ஒளிந்தன; அங்கிருந்தபடிக்கு

நிலா இறந்ததாக எண்ணி அழுதபடியிருந்த
நட்சத்திரங்களுக்கு ஆறுதல் கூறின
“நிலா சாகவில்லை , பூமிக்குதான் போய் இருக்கிறது
ஒரு வீட்டு வாசலில் நாங்கள் பார்த்துவிட்டு
வந்தோம் “என்று ! Ω

@2020,All Rights Reserved To Author

# நீயற்று போனபின்பு...



விஷம் தின்று நீலமாகிய வானம்;
கோபமாய்ச் சூரியன்;குளிக்காமல்
அழுக்கோடு நிலாப்பிள்ளை;
கூன் விழுந்த வானவில்;
நட்சத்திர நெருஞ்சிமுற்கள்;
பரதேசிகளாய் அலையும் மேகங்கள்...
அழகென்று வர்ணிக்க வானில்கூட ஏதுமில்லை...

அலங்காரம் செய்யாத நடிகைகளாய்
அத்தனைப் பூச்செடியும்;
பூனை தள்ளிவிட்டு மேசை முழுதும் ஒழுகி ஓடும்
பாலாய் நதிகள்;
பலாப் பழத்து மேல்தோலாய்
புல்வெளிகள்;
-பூமிக்குள் ஐம்பதடி ஆழம் சென்றது போல்
தகிதகிக்க தடவிச் செல்லும் காற்று;

மார்கழிப் பொழுதில் நாயென
ஊளையிட்டு அழுதே சாகும்
என் கவிதைகள்;
நீயற்றுப் போனபின்பு பூமியிலும் ரசிப்பதற்கு
பூமகளே ஏதுமில்லை...Ω

@2020,All Rights Reserved To Author



## என்ன செய்தனையோ..?

பெற்றவள் முகம்கூட சட்டெனச்சென்று
மறதியில் விழுகிறது-
பெண்ணினம் என்றதும்
உன்முகம்தான் நினவுக்கு வருகிறது;

ஒவ்வொரு முறையும்
உனக்கெனச் செய்யும்
தவறுகள் இனிக்கிறது-இங்கு
இமைப்பது போல் உன்னை
நினைப்பதும் என்னில்
அனிச்சையாய் நடக்கிறது..

கடிதம் எழுத தமிழை எடுத்தால்
கவிதைகள் உயிர்க்கிறது-உன்
மவுனம் பார்த்து மவுனம் பார்த்து
இரவில் தூக்கம் இறக்கிறது..

உன்னை வார்த்தெடுத்தக்
கவிதையெல்லாம்-அந்த
வாள் விழிகள் தீண்டடல் பட்டு ஒரு
போர்க்களத்தில் மரணம் கண்ட
வீரன் போல கிடக்கிறது..**Ω**

@2020,All Rights Reserved To Author

# வழியில் எங்கேனும் சந்தித்தால்....

வழியில் எங்கேனும் சந்தித்தால்
ஏதாவது பேச வேண்டுமென நினைக்கிறேன்
அப்படி பார்க்கிறபோது மவுனியாகிறேன்
நீயும்தானா?

யாருடனோ நீ சிரித்துப்பேசிக்கொண்டுபோக
அவன் அண்ணனாகவோ, தம்பியாகவோத்தான்
இருப்பான் அவளுக்கு நீ தூங்கு ,என்றாலும் கேட்காத
நெஞ்சு , தூக்கத்தின் குரல்வளையினைப் பிடித்து
நெறித்துக்கொல்கிறது தினமிரவில்...
அங்குனக்கும் இப்படித்தானா?

உன் பெயர்கொண்ட சிறுபிள்ளைக் கண்டால்
தலையைக் கோதி ஸ்னேகிக்கிறேன்..
ஒரு கூட்டத்தில் உனதந்த பெர்ஃப்யூம் வாசனை
நுகர்தல்கூட உன்னைத் தேடச் சொல்கிறது...
எதையாவது மறந்துவிட்டுப் போய் அதை எடுக்கத்
திரும்பி வர மாட்டாயா என்று சிலாகிக்கிறது
தினமும் சாயந்திரம் தனிமைப்பட்ட மனசு....
அங்குனக்கும் அப்படித்தானா?

அல்லது நான்
ஒரு விடியலை உணரும் சேவலாய் மெல்ல மெல்ல
காதலை உணர்ந்து கவிதையாய் கூவுகிறேனோ? Ω

@2020,All Rights Reserved To Author

# உயிர் வலிக்கும் தருணங்கள்...

காதலி மனைவியாகிவிட்டால் உயிர் சிரிக்கிறது;
அவள் மற்றவன் மனைவியாகிவிட்டால் வலிக்கிறது;
வேறொருத்தியோடு அவனும்
வேறொருத்தனோடு அவளும் என்றானபின் சில நேரம்
சந்தோஷம் மின் விசிறியில் தூக்குப் போட்டுச் சாகிறது;
அல்லது தூளியில் தூங்கும் பிள்ளைதானென்று வாழ்கிறது...
என்ன செய்ய மனிதருக்கு திசைகள் எட்டானது
சூரியனுக்கு மட்டும் ஒரு கிழக்கு ஒரு மேற்கு என்றானது...

அவனவனுக்குப் படைக்கப்பட்டதை விட்டு அவனவனுக்கு
கிடைக்கப்பட்டதை அவனவன் உண்டுகொள்கிறான்
ஏதேனும் ஒரு மழைக்காலத்துப் பசியில்....!
முதலில் உண்கிறவன் உண்டு முடித்தபிறகு
காதல் கடிதங்கள் எழுதுவதில்லை...

இப்படியாக முதலில் உண்டுகொண்டவர்கள்
வழியில் எங்கேனும் சந்திக்க நேரிட்டால்
ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டமைக்காக
வருந்துவதில்லை....
மாறாக ஒரு கண் சிமிட்டல்.
நானும் அவரு(ளு)ம் குழந்தைகளும்
நலமாயிருக்கிறோம் என்ற அர்த்ததில்!
என்ன சொல்ல எச்சம் என்பது
வாழ்வின் எல்லா தருணத்திலும்
கிடைத்துக்கொண்டுதானிருக்கிறது...
ஏழ்மையில் காதலிப்பவனுக்கும் ; ஒருதலைகளுக்கும்! Ω


@2020,All Rights Reserved To Author

## ஞானவழி போகிறேனே...

காதலை பொருளாதாரம் முடிவு செய்கிறது.
கல்லூரி காலத்தில் ஏனோ இதை எந்த
ஆசானும் சொல்லித்தருவதில்லை....

அப்போதெல்லாம்
எந்த சாமியிடம் வேண்டினாலும் கருத்தத் தோலோடும்
கசங்கிய உடையோடும் இருப்பவளைக் காதலிக்க
மனசுக்குப் பயிற்சியில்லை; புத்திக்கும் இஷ்டமில்லை;

சற்று நேரந்தான் என்றாலும் ஜொலிக்கிற விளக்குகளைச் சுற்றிவிட்டு
செத்துபோகின்றன ஈசல்கள்;
கிட்டாது என்றபோதும் சிவப்புத்தோலுக்கு ஏங்கினது மனது
எதிர்காலத்தில் இருட்டில் நடக்கப்போகும் கூத்துக்கு....



உணர்வும் குணமும் தேவைப்படும் வாழ்க்கைப்
பரீட்சைக்கு அழகும் நிறமும் பற்றி விடிய விடிய
படித்துகொண்டுபோய் தேர்வெழுதி
தேர்விலே தோற்ற ஜென்மங்கள் ஆயிரம்...

ஆனாலும்  சில பணத் தேனற்ற பட்டாம்பூச்சிகள்
காதல் வழிச் சாலையிலே கால் நடந்து போகவில்லை....
“இளைப்பாறிப் போகும் வழிப்போக்கன் எனக்கு
மரத்தடி நிழல்கள் நிரந்தரம் அல்ல”- என்று
பணமற்ற ஆற்றாமையில் பலவாறு எழுதிவைத்தன...
அதில் நானும் ஒருவன்..Ω

@2020,All Rights Reserved To Author

# எல்லாக் கரும்பும் இனிக்கும்



எதிர் எதிரே வரும் போது
குனிந்து கொண்டோம் - பின்புஎதுவோ
நமக்குள் இருப்பதாக
அறிந்து கொண்டோம்

காத்திருக்க முடியாமல்
கடிந்து கொண்டோம் - கடைசியில்
காதலெது காதலிது என
புரிந்து கொண்டோம்

அக்கரையில் பச்சையென்று
இக்கரைக்குத் தெரிந்ததனால்
எக்குறையும் இல்லாமல்
பிரிந்து கொண்டோம் - அதன் பிறகு

இரவும் பகலும் சூரியனும் நிலவும்
அல்லியும் தாமரையும்
அர்த்தத்துடன் படைக்கப்பட்ட
ரகசியத்தை உணர்ந்து கொண்டோம்

வேறு வேறு பாதைகளில்
ஓடி வந்து மூச்சிரைக்க முதுமை தட்டி
ஓரிடத்தில் நின்று கொண்டோம்

உன் கணவன், என் மனைவி,
உன் குடும்பம்,என் குடும்பம் -இப்படி
காற்றடித்த வழியிலே
குப்பையென பறந்த பின்னும்
கசக்கவில்லை அமைதி கொண்டோம்

அங்கிருந்த கரும்பு தோட்ட
கல்லறையில் எழுத்துக்களை
பார்த்தவுடன் ---இன்று தான்
"எல்லாக் கரும்புமே இனிக்கும் "என்ற
காதல் ஞானம் கண்டுகொண்டோம் !

@2020,All Rights Reserved To Author

# காதலும் திருமணமும்

"திருமணம் செய்ய வேண்டி தான்
அந்த காலத்தில் காதலித்தனரா?"- என்றார்
கடவுள்

"ஆம் அதிலென்ன சந்தேகம்?"
என்றேன் நான்..

வேலியோரக் கள்ளிச் செடியிலும்
மரத்திலும் முற்களை வைத்து தங்கள்
பெயர்களை கீறி வைத்ததனையும்
குட்டிச்சுவர், குப்பைத்தொட்டி
இங்கெல்லாம் கூட எழுதி வைத்ததையும்
நான் பார்த்திருக்கிறேன். சரி
இந்த காலத்திலும் திருமணம்
வேண்டி தான் காதலிக்கிறார்களா?"
என்றார் கடவுள்.

"ஆம் அதிலென்ன சந்தேகம்?"
என்றேன் நான்.
"வேலியோரத்திலும், மரத்தடியிலும்
குட்டிச்சுவரோரத்திலும்
குப்பைத்தொட்டியிலும் பிறந்து
ஒரு நாளான பச்சிளம் குழந்தைகள்
வீசப்பட்டு கிடப்பதை பார்க்கிறேனே
எனவே கேட்டேன். ஒரு கட்டுப்பாடே
இல்லியா இந்த மனிதர்களிடம்? இனி
இவர்களை நம்புவதாயில்லை என்றார்
கடவுள்.
"உங்களுக்குத் தெரியாமலா
இத்தனையும் நடக்கிறது?- இனி
உங்களை நம்புவதாயில்லை"
என்றேன் நான்.

@2020,All Rights Reserved To Author

# வேறு பூவா இல்லை?

நம் அன்பு நிஜமானதென்றால் இந்நேரம்
நீயும் அழுதுகொண்டிருப்பாய் என நினைத்தேன்

யார்மீது யார் அதிகம் பாசம் வைத்திருந்தோம் என
அளவிட்டுப்பார்ப்பதற்குள்
தொலைந்திட்டு போனவள் நீ..

ஒரு நீ ; ஒரு நான்; ஒரு பிறவி;
இனி இப்படி மறுபடி வாய்க்கப்போவதில்லை
இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை
தொலைத்தமைக்காக சாகத் துணிந்தது மனசு.

என்றாலும் நீ உன் கணவன் ,குழந்தையுடன்
கோவிலுக்கு வந்ததனைக் கண்டபின்பு
மறுபடி பழய மரத்தடி,பூங்கா எங்கும் ஓடி
மூலை முடுக்குகளில் நான் கொட்டிவைத்த
அன்பினையும் நீ ஒட்டிவைத்த அன்பினையும்
தராசு கொண்டு அளவிட வேண்டியதாயிற்று.
நான் நிஜம்; என் காதல் நிஜம்;
என் திருவாசகம் நிஜம்;
அது பாடப்பட்ட இடம் கோவிலில்லை இடுகாடு என்றுணர்ந்தேன்...
அடியே....அறுபதில் வரவேண்டிய ஞானத்தை
பிரிவதால் சொல்லிக்கொடுத்தவளே...
அன்று கூறியதைதான் இப்போதும் சொல்கிறேன்
“இறந்தும்கூட உன் நிழல் பட்ட இடத்தில்தான்
புதைபட விரும்புகிறேன்”....என்று.ஏனெனில் நான்
கொண்டிருந்த காதலில் மாற்றமில்லை.. ஆயினும்
ஏன் சாக வேண்டும் நான்?
தோட்டத்தில் வேறு பூவாயில்லை? Ω

@2020,All Rights Reserved To Author

## எரிந்து சாகிறேன்...

நீ மஞ்சள் அரைத்துவிட்டுப் போன இடம்போல
மனசு நிறம் மாறிக் கிடக்கிறது....
என் ரோஜாச் செடியினை அலைமோதும்
கடற்கரையில் பதியமிட்டதற்காகவேண்டி
இன்னும் அழுது கொண்டிருக்கிறேன்.....

அடியே...கட்டுடலைத் தாவணியாலும்
காதலை மவுனத்தாலும் மூடிக்கொண்டவளே....
ஹிருதயத்தின் வாசலில் தீப்பொறியால் கோலமிட்டவளே...
பேசத்தெரிந்தபோது பிணங்களாகவே இருந்துவிட்டோமோ?

பாய்ந்து வந்த சிங்கம் நம் காதல் மானை
கடித்துக் குதறி எலும்பினையும், சதையினையும்
நொறுங்கக் கடித்துத் தின்னும் வரை
காப்பற்றத் திறணியற்று எதிர் ஏதிர் திசையைப் பார்த்தபடி
பாராமுகத்தோடு பயணித்தோமோ...?



பார்ப்பதற்கு ஆளில்லாத அந்த மேடையில்
யாருக்காக வேஷமிட்டு ஆடினோம் என்று
இருவருக்குமே தெரியவில்லை.
வேறென்ன சொல்ல? இப்போதும்கூட
ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால்
சொல்லியனுப்பு திருந்தி வாழ்கிறேன் ..
இல்லையென்றால் கொள்ளியனுப்பு
எரிந்து சாகிறேன்.... Ω

@2020,All Rights Reserved To Author

# விடலை காலத்து எதுகை மோனை..

என் காதல் பைங்கிளி வானில் பறந்ததும்
ஞானம் வந்ததடி..
காதல் என்பது பொய்யென பூ ஒன்று
பாடம் சொன்னதடி...

பாடம் சொன்ன பூவிடம் எனக்கந்த
புன்னகைப் பிடித்ததடி..
பிடித்ததை அதனிடம் சொல்லிட நினைக்கையில்
என்னிலை தடுத்ததடி...
வித்தைகள் கற்றிட சித்திரப் பூங்குயில்
விண்வெளி சென்றதடி-அங்கு
மேகத்தை நேசித்து மேலும் பறக்கையில் அதைச்
சூரியன் கொன்றதடி..

உனக்கென ஓர்முறை வாழ்ந்திட நினைத்த
உயிர் இங்கு தவிக்குதடி..
சிரித்து நீ பழகிய பொழுதுகள் நினைத்தால்
இதயத்துள் வலிக்குதடி..

நிதம் இந்த பறவை உன் விழிவழி
அனபை தவணையில் பெற்றதடி..பின்
மழைவரும் காலம் வாசலில் கோலம்
தவறென பட்டதடி...

நீ அருகினில் வருகையில் உரசிய ஆடை
என் கவிதைக்கு எதுகையடி
நீ விலகிய தூரம் நினைத்து நிதமிங்கு
இரவினில் அழுகையடி..
உன் காலடி தடத்தினில் கவிதைகள் செய்து மனம்
உறக்கத்தில் படித்ததடி..
உன் கனவினை சுவாசிக்கும் காற்றெனக் கொண்டு
உயிர் இங்கு துடிக்குதடி. **Ω**

*@2020,All Rights Reserved To Author*

## விடலை காலத்து எதுகை மோனை..(2)

நிலவுக்கு விபத்து நேரிடும்போது
வான் சென்று நீதான் ரத்தம் தர வேண்டும்....
இருட்டுக்கு உந்தன் கருவிழி கொண்டு
இன்னும்கொஞ்சம் நீதான் வண்ணமிட வேண்டும்...

சூரியன் செத்ததும் தேர்தலே இன்றி உன்
அழகிய பார்வை ஆட்சிக்கு வரவேண்டும்...
பேரிடர் ஜாதிகள் கொலையுண்ட வழக்கில்
உன் வெட்கிய கன்னங்கள் சாட்சிக்கு வரவேண்டும்...

தோலுக்குத் தங்கத்தில் முலாமிட்டுப் படைத்தவன்
நாளைக்கு நான் தரும் விருந்துக்கு வரவேண்டும்; இனி
வேறு யாரையும் இப்படி படைத்திட மாட்டேன்
என்றொரு சத்தியம் எனக்கவன் தர வேண்டும்...

தேவதையுன்னை தேரினில் வைத்து தினம் தினம்
ஊர்வலமாகக் கொண்டுவரவேண்டும்...கழுத்தில் தாலி
அடிமையின் சின்னம் எனவே நாம் ஆயுள் சாலையில்
கையிரண்டு கோர்த்தே நடந்திடவேண்டும்...

பூமிக்கும் பிடித்தவள்; வானுக்கும் பிடித்தவள் ;
என்னை சாவுக்குப் பிடித்திடும் முன்பே - நீ
சம்மதம் சொல்லிட வேண்டும்.....
காற்றுக்கும் ஆற்றுக்கும் தெரிந்திட்ட காதல்
ஊருக்குத் தெரிந்திடும்முன்பே நீ
உண்மையைச் சொல்லிட வேண்டும் ! Ω

@2020,All Rights Reserved To Author

# நாழிகைகள் நீள வேண்டும்



உன் தாய் இன்னும் இளைத்துப்போக வேண்டும்..
அவளின் பின்னே வரும் உன்னை எனக்கு
வெகுவாய் மறைக்கிறாள்.

அதிகாலை எழுந்து ஆயிரம் புள்ளி
ஆயிரம் வரிசையில் கோலமிடக் கற்றுக்கொள்..

பால் வாங்கும் வரிசையில் நீ கடைசி ஆளாய் நின்றிரு;

நீ ஜன்னலோரம் அமர்ந்துவரும் பேருந்து என் வீட்டருகே
கெட்டு நிற்க வேண்டிக்கொள்;

குழாயடியில் நீ நீர் எடுக்க வரும்போதுமட்டும்
சொட்டு சொட்டாய் வடியும்படி வரம் ஒன்று வாங்கிக் கொள்.
ஏனெனில் நானுன்னை பார்த்து நிற்கும் நாழிகைகள்
நீண்டிருக்க வேண்டும் எனவே…


பழைய புத்தகத்து வெற்றுப் பக்கங்களில் ஏதேனும் எழுதி
விற்பனைக்குக் கொடு -
நான் விலை போட்டு எடுத்துக்கொள்கிறேன்;

பேருந்தில் மேலே உள்ள கம்பியினை எட்டிப் பிடிக்க
எத்தணிக்காதே எனக்குச் சொந்தமான பொருள் காட்சிப்படுத்தப்
படுவதாய் கவலைப் படுகிறேன்….

Ω

@2020,All Rights Reserved To Author

# விவாகரத்துகள்



யாரேனும் ஒருவர் ஊமையாகவோ
செவிடாகவோஇருந்திருக்கும் பட்சத்தில்
 விவாகரத்துகள் அதிகம் நடப்பதில்லை
என நான் யோசித்துக் கொண்டிருக்கும்போது
ஈசான மூலைச் சுவற்றில் பல்லி கத்துகிறது....

பெங்குவின் பறவை உலகத்திலும்,
பட்டாம்பூச்சிகளின் உலகத்திலும்
விவாகரத்து சட்டங்களும் இல்லை
அதற்கான வழக்குகளும் இல்லை...


தண்டவாளத்தின் இரு பக்க இரும்பு பாலங்களும்
நன்றாக இளைக்கப்பட்டு ,
நேர்த்தியாக செப்பனிடப் பட்டு அதன் பின்
அதன் மீது இரயில் சக்கரங்கள் உருட்டப்பட வேண்டும்..

அப்படிபட்ட பயணத்தில் விபத்தினால்
சிறுபிள்ளைகள் அடிபடமாட்டார்கள்...

சம்பாதிக்கிறவன் வேகமாக கத்துவதும்,
சமைத்துக்கொண்டிருப்பவள் அறையின்
வெளியே கேட்கும்படி கத்துவதுமான காட்சிகள்
எப்போது நடந்தாலும் அவை யாவுமே பார்த்துவிட்டு அழிக்கப்படும்
ஆபாச படங்கள் போல இருத்தல்வேண்டும்

@2020,All Rights Reserved To Author

## விவாகரத்துகள் (தொடர்ச்சி)



மூளையின் ஏதோ ஒரு ஓரத்தில் பதிவு
செய்யப்பட்டு மீண்டும் மீண்டும்
ஒளிபரப்பிக்கொண்டால்
நூறாவது நாள் வழக்காடு மன்றத்தில்
திரையிடப் பட்டுவிடும்
விவாகரத்து என்ற தலைப்பில்....

அவன் நார் கொண்டு வரவும்
அவள் பூ கொண்டு வரவும்
அவன் அரிசி கொண்டுவரவும்
அவள் நீர் கொண்டுவரவும்
சம்மதித்துதான் அந்த ஊர்வலம் நடத்தப்பட்டது ;

அந்த ஊர்வலத்தில் அவர்களை இழுத்துச் சென்ற
குதிரையின் பெயர் சத்தியம்.

என்னைத் தோண்டினால் நீர் தருவேன் என்ற சத்தியத்தை புவியோ
என்னை வளர்த்தால் நிழல் தருவேன் என்ற சத்தியத்தை மரமோ
மாற்றிக் கொள்வதில்லை.

வேறு வழியில்லை , இது பயணம்; இந்தக்கடையில் காலை உணவு,
அடுத்தக் கடையில் மதிய உணவு ; சுவையும் உணவும் கடைகளும்
என் சுதந்திரத்திற்கு உட்பட்டு தேர்வு செய்கிறேன்
என்கிற கோழிகளுக்கு நான் சொல்வதெல்லாம் ஒன்றுதான்

குஞ்சு பொறிப்பதற்கு முன்பு அந்த முடிவினை எடுங்கள்.

Ω

@2020,All Rights Reserved To Author

# குடுகுடுப்பைக்காரன்

மார்கழி ராத்திரியில் , பனியில் , ,



துரத்தி ஊளையிட்டு குறைக்கும் நாய்களை
விரட்டியபடி ,சங்கு ஊதிக்கொண்டு - நிஷ்டையினை
கொல்லும் அவன் குடுகுப்பை சப்தம் ...

எல்லோருக்கும் பிடிக்கவில்லை என்றாலும் வாசல்
திண்ணையில் இன்றோ நாளையோ மரணம் என்ற
நினைப்பில் இருமியபடி தூக்கம் இன்றி புரளும்

முதுமையின் காதுகளுக்கு அது ஒரு அர்த்த ராத்திரியின் சப்தத் துணை ...

முன்னிரவுப் பொழுதில் முழுநிலவு வெளிச்சத்தில் வாசலில் பாய்போட்டு

அம்மாவும் பாட்டியும் அத்தனை கதைகள் சொல்வார்கள் !

சுடுகாட்டில் தங்கிவிட்டு மண்டை ஓட்டில் மை எடுத்து

அவன் நம் நெற்றியிலே வைத்து விட்டால் நாமெல்லாம்

ரத்தம் கக்கி செத்துடனும் என்று ........

இரவில் தனியாக நீ எழுந்தால், குடுகுடுப்பை சப்தம் கேட்டால்

வீதிக்கு போயிவிடாதே என்று அத்தைக்காரி சொல்லிவைக்க -

அந்த வயசில் அவனை இருட்டில் சந்திக்க முடியாமலே போனதெனக்கு ...

காலையில் வீடு வரும் அவன் இந்த வீட்டில் பெண் தெய்வம் நிற்கிறது என்பான்

வெள்ளைக்குதிரையில் முண்டாசுக்கட்டிக்கொண்டு வீரனாரு நிக்குறாரு என்பான்–

வெள்ளிக்கிழமை வெத்திலைபாக்கு எலுமிச்சை கொண்டுபோய் குலதெய்வக்கோவிலுக்கு
கொடுங்க என்பான் ...இத்தனையும் நான் அவனை நேரிலே பார்க்க திரணியற்று
கதவிடுக்கில் ஒளிந்து நின்று காது கொடுத்தது கேட்டைவைதான்

மீசை முளைத்த இள ரத்த பருவத்தில் அந்த குடுகுடுப்பைக்காரனை தைரியமாய்
எதிர்கொள்ள ஒரு நாள் நடுநிசியில் வெளிவந்து நின்றேன் ....

மை வைத்துவிடுவானோ என்ற பயம் மனதிற்குள் இருந்தது ....

சங்கு சப்தம்,நிறுத்தி என்னை நோக்கி நெருங்கிவந்த அவன்

தீப்பெட்டி இருக்க தம்பி என்றான் ....இல்லை என்றேன் ...

இருமியபடி படுத்திருந்த முதுமை எடுத்துவந்து கொடுத்தது ;

என்னிடம் இருந்த பயமென்ற நெருப்பு அணைந்தது..

இப்போதெல்லாம் குடுகுடுப்பைக்காரன் சொல்லுவது பலிக்கிறது

என்பதற்காக நான் அவனுக்கு தர்மம் இடுவது இல்லை

குடுகுடுப்பைக்காரனுக்கும் பசிக்கிறது என்பதற்காக .... Ω

@2020,All Rights Reserved To Author

# அஸ்தம காலத்து புலம்பல்



எல்லோரும்  நிராயுதபாணியாக
இந்த போர்க்களம் வந்தவர்கள்…

எந்த வயதில் உட்கார்ந்து யோசித்தாலும்
அந்த வயதிற்கு மேற்பட்ட ஞான சங்கதிகள்
புத்திக்கு வாய்க்கவில்லை …..

அப்படி வாழ்விற்குள் என்னதான் வைத்தாயோ
மன உரசலோ பெண் சதை உரசலோ
மண்டையை கிறுக்காகும் மற்றவன் புகழ் உரசலோ …?
திருப்தியாய் வாழ்ந்துவிட்டோம் இனி சாகலாம் என்று எவனும்
கயிறு  எடுத்துப்போய் தூக்குமாட்டிக்கொள்ளத் தயாராக இல்லை
ஏனென்று தெரியவில்லை…

சுண்டு விரல் தீண்டி நசுக்கினால் அடுத்தகணம் மரணம் என்ற நிலையிலும்
இரையை இழுத்திக்கொண்டுபோய் புற்றுக்குள் போடும்  முயற்சிகளில் எறும்பு,,,
வாழ இன்னும் ஏதோ இருக்கிறதோ… ?

அந்த இன்னும் என்பது நாளையோ நாளை மறுதினமோ வரக்கூடுமோ …?
இப்படியாக ஏங்கிக்கொண்டு இப்படியாக தேடிக்கொண்டு
இப்படியாக எதிர்பார்த்துக்கொண்டு காற்றில் கரையும்  நடவுக்காரியின்
ஏலேலோ பாட்டாய்  நாமும் கரைகிறோமோ …?

எல்லோரும் அந்த காக்கைபோல கூடு கட்டி குஞ்சு பொறித்துவிட்டு
சுற்றித் திரிந்து எச்சம்பொறிக்கி விட்டு செத்துபோகவேண்டி
உலகம் படைக்கப்பட்டதாக தெரியவில்லை…

எல்லோரும்  நிராயுதபாணியாக இந்த போர்க்களம் வந்தவர்கள்…
எந்த வயதில் உட்கார்ந்து யோசித்தாலும் அந்த வயதிற்கு மேற்பட்ட ஞான சங்கதிகள்
புத்திக்கு வாய்க்கவில்லை
அதனால் பசித்தாலும் ,கிழிந்த சட்டையோடு யாரும் காதலிக்கவில்லை என்றாலும்
கோவில் சிலைகளிடம்  சோகம் கொட்டிவிட்டு
வாழத்தான் வேண்டியிருக்கிறது  **Ω**

*@2020,All Rights Reserved To Author*

# யுத்த மதம்



இவை பற்றியெல்லாம் நான் உங்களுக்கு

சொல்லத்தேவையில்லை ; உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும்

உலகில் நான்காயிரத்து இருநூறு மதங்கள் இருப்பதும்

மதங்கள் கடவுளை இப்படித்தான் வணங்கவேண்டும் என வரையறுப்பதும்

கடவுள் புகழ் பரப்ப சிலர் அவதரித்ததும் அப்படி

அவதரித்த சிலர் அதிகரித்ததும் அதனால் உலகில்

நான்காயிரத்து இருநூறு மதங்கள் இருப்பதும்.

ஒரு மதம் இன்னொரு மதத்தினை சாகடிக்கவேண்டி

ஈட்டிகளை எறிந்ததும் ; புனித நூல் பூச்செடிகளில் எல்லாம்

ரத்தப் பூக்கள் உதிர்ந்ததும் ; பத்தாம் நூற்றாண்டு காலம் தொட்டே

மானுடம் மதத்தால் மக்கத் தொடங்கியதும்...

போரின் காதலி மதம் என்பதும்

மதத்தின் காதலன் போர் என்பதும்

சிலுவைபோர் காலம் தொடங்கி

இஸ்ரேல் பாலஸ்தீனம் என இன்றுவரை

இந்தக் காதலனும் காதலியும் பிரியவேயில்லை என்பதும்

நான் உங்களுக்கு சொல்லத்தேவையில்லை

உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும் !

வாளும் கேடையமும் வரலாற்றை துவம்சம் செய்ததும்

அரசர்கள் அன்று நீரூற்றி வளர்த்த அந்த மரம் "மதம் " என்பதும்

செத்துப்போன மனசாட்சிக்கு தேசம் தோறும் திவசம் செய்வதும்

குருஷேத்திர போர் முறைகள் நம் குடும்பத் தினுள் வலம் செய்வதும்

கரம் கூப்பித் கும்பிட்டாலும்; மண்டியிட்டுத் தொழுதாலும்

மார்பில் குறியிட்டுக் கொண்டாலும் நம்

கண்களுக்கு தெரிவது என்னவோ ஒரு சூரியன் தான் என்பதும்

நான் உங்களுக்கு சொல்லத்தேவையில்லை

உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும் Ω

@2020,All Rights Reserved To Author

# பணம் செய்தல்

ஒரு துளி நெருப்புப் பொறியை சிறிதளவு பஞ்சு
அல்லது மெல்லிய துணியோடு வைத்து
மெல்ல ஊதிக்கொள்ள வேண்டும்;

சிறிதளவு உமி தூவிக்கொண்டு மறுபடியும் ஊத வேண்டும்
தேங்காய் நார் அல்லது பன்னாடை வைத்து
அதன்பிறகும் ஊத வேண்டும்ஸ.

புகைய ஆரம்பிக்கும்,பின் சிறு ஜீவாலை வரும்;
அதிக வேகத்தில் காற்றடிக்க தொடங்கினால்
கைகளை குவித்து அணைந்திடாமல் காக்க வேண்டும்...
அல்லது சிறு தடுகளை கொண்டு மறைவு கட்டலாம்...

மெல்ல எரியத்தொடங்கும் இப்போது
சிறு சுள்ளிகளை பொறுக்கிப் போட்டு மேலும் உமி தூவலாம்...
சற்று பெரிய விறகுகளை போட தருணம் பார்த்து
ஒவ்வொன்றாக போட்டு தீயை வளர்த்துவிடவேண்டும்...

இப்படி எரியும்போதே சில தீக்கட்டிகளை எடுத்து
பத்திரப் படுத்திக் கொள்ளவேண்டும்;
ஒரு வேளை அடை மழை வந்து அத்தணையும் அணைந்தால்
மறுபடி பற்றவைக்க அவை உதவும்;

வராட்டி, விறகு இப்படி பற்றிக் கொண்ட தீ
கொளுந்துவிட்டு எரியும் ;
இப்போது பெரும் காற்றடித்தால் கூட
அது தீயை வளர்க்குமே தவிர அணைக்காது!

ஊத ஊத வாய் வலிக்கும்;
ஊதுபோது கண்ணில் புகை பட்டு நீர் வடியும்;
சுள்ளிகள் படபடத்து எரிந்து விரலில் பட்டு காயம் வரும்;
உஷ்ணம் மேலிட மேலிட கிட்ட அமர விடாது தகிக்கும்;
நெருப்பு உண்டாக்கி குளிர்காய்யவதென்பதும்
**பணம் செய்தல் என்பதும் கஷ்டம்தான். Ω**

@2020,All Rights Reserved To Author

# தீதும் நன்றும்



அம்மா,அப்பா,புத்தகம்
இவற்றில் ஏதேனும் ஒன்று தப்பானதாய் இருந்தாலும்
நீயும் நானும் கெட்டவனாகத்தான்
இருந்திருப்போம் என்பது தவறு;

கெட்டவனை கொல்லும் அரசனை
கெட்டவனை கொல்லும் கடவுளை
துதிபாடியே நீயும் நானும் வளர்ந்துவிட்டோம்;

கெட்டவனை உருவாக்காத ஆட்சி
ஏனந்த அரசனால் தரமுடியவில்லை என்றோ
கெட்டவனை படைக்காத உலகை
ஏனந்த கடவுளால் தரமுடியவில்லை என்றோ
நீயும் நானும் வினா எழுப்பிடவில்லை.

அதிகம் பசித்தவை அதிகம் மேய்ந்தன...

ஆண் ஆடு பெண் ஆட்டின் மீதேறி பெருந்திரளாய் பிரசவித்தன
இந்த புல்வெளி முழுக்க மேய்ந்துகொள்ளுங்கள் என்று
மேயவிட்டுப்போனவன் கருப்பும் வெள்ளையுமாய் கலந்துவிட்ட மந்தை தேடி
மறுபடி வரவேயில்லை - எனினும்
நல்ல ஆடுகள் பிரார்த்தனை செய்தபடிதான் இருக்கின்றன..

சிங்கத்தின் பசிக்காகத்தான் உங்களை சிருஷ்டித்திருக்கிறேன் என்று
முயல்களிடம் கடவுள் முன் கூட்டியே சொல்லவில்லை எனினும்
அசரீரி வழியாக அறிந்துகொண்டவை த்ப்பிப் பிழைக்கின்றன...

மஞ்சளாய் பூத்திருக்கும் மகரந்தத்தில் விஷமிருக்கும் பூவும்
வெள்ளையாய் பூத்திருக்கும் தனக்குள் தேனிருக்கும் ஒரு பூவும்
இந்த மானிடர்க் காட்டில் பரந்துபட்டன ;
பூக்களை கசக்கி நீயும் நானும் நாக்கில் வைத்தபிறகு
யாராவது ஒருவர் எஞ்சி இருப்போம் ;காரணம் கெட்டவை வளர்க்கப்படவில்லை;
கெட்டவை படைக்கப்பட்டிருக்கிறது!

அம்மா,அப்பா,புத்தகம் இவற்றில் ஏதேனும் ஒன்று தப்பானதாய் இருந்தாலும்
நீயும் நானும் கெட்டவனாகத்தான் இருந்திருப்போம்என்பது தவறு! Ω

@2020,All Rights Reserved To Author

# யதார்த்தம்



நாம் பேசினாலும், சிரித்தாலும் ,அழுதாலும்
தலையில் அடித்துக்கொண்டாலும் ,வயிற்றில் அடித்துக்கொண்டாலும் ,
பிரியமானவர்களை கட்டிப்பிடித்துக்கொண்டாலும்,
செத்துப்பொய்விடலாமா என நினைத்தாலும் -அது
நம்மிடம் பேச்சுகொடுக்காது,யோசனை சொல்லாது,
மறுப்பும் சொல்லாது, சரியும் சொல்லாது;

தனக்கென ஒரு நிறமின்றி,தனக்கென ஒரு உருவமின்றி
தனக்கென ஒரு நிழல் இன்றி,அது மிக அமைதியாய்
நமக்குப் பக்கத்திலேயே அமர்ந்திருக்கும்.
திடமோ திரவமோ வாயுவோ அற்றதும்
நுகரவோ ,உணரவோ ,ருசிக்கவோ முடியாத அது
கணிக்கவும் முடியாத ,கவனிக்கவும் முடியாத
காலதேவனின் ஒருவகையான லகரி வஸ்து.

மிக சந்தோஷமான நேரங்களை அது
மின்னலடிக்கிற ஒரு கண பொழுதில் விழுங்கிவிடுகிறது-
தொண்டைக்குள் புகும் சோக உருண்டைகளை அது சீக்கிரம்
செரிக்கவிடுவதில்லை ..
காற்றுத்துணி கொண்டு கன்னங்களை
விடிய விடிய துவட்டினாலும் சூரியகீற்று வரும் வரைக்கும்
விம்மிக்கொண்டுதான் இருக்கிறது வலித்த இதயம்... அது
இவை பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை
அதற்கு இவைபற்றியெல்லாம் கவலையில்லை..

எப்படி வளர்க்கபோகிறோம் என தெரியாமல்
அடுத்த பிள்ளை பெற்றுக்கொள்ளும் அப்பாக்கள் போல அது
கடிகார முற்களை நகர்த்திக்கொண்டும் மூன்று வேளைக்கும் பசிக்கவைத்துக்கொண்டும்-
மிக அமைதியாய் நமக்குப் பக்கத்திலேயே
அமர்ந்திருக்கிறது.

ஏதோ ஒரு திசை நோக்கி அதன் சக்கரங்கள் உருண்டுகொண்டிருக்க
சாவை நோக்கித்தான் போகிறோம் என்று சருகுகளும்
வாழத்தான் போகிறோம் என்று தளிர்களும்
காற்றின் காதில் கிசுகிசுக்கின்றன..

சப்தகாலம்,முத்த காலம்,முணகல் காலம்...இப்படி
எல்லாவற்றையுமே அது மிக சொற்பமாகவே வைத்திருக்கிறது..
வானம் ,நெருப்பு, காற்று ,தண்ணீர் , ரத்தம், சதை, எலும்பு , உயிர்
இப்படி எல்லவற்றையுமே கேடுகெட்ட ஆண்டவன் அதோடு சேர்த்து
இறுகக் கட்டிப்பொட்டிருக்கிறான் .
ஆமாம் ..யாதார்த்தம் என்று அதற்கு பேர் வைத்தவன் கூட -அது நமக்கு
மிக அருகில் அமர்ந்திருந்தும்கூட -அதை இன்னும் பார்த்திருக்கவில்லை.

Ω

@2020,All Rights Reserved To Author

# கருவிகள்



மறைத்து வைக்கப்படும் கருவிகள்
எல்லோர் கண்களுக்கும் தெரிவதில்லை
வெளிச்சம் காட்டினால் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது

கருவிகளின் பயன்பாட்டிற்கும் அதைக்
கண்டுபிடித்தவன் எண்ணத்திற்கும் இருக்கும் ஒரே
ஒப்பந்தம் "ஒரு கருவி இரண்டு வேலைக்கு
பயன்படவேண்டும்" என்பதுதான்.

ஆட்டுக்கடாயின் கழுத்தை அறுத்துவிட்டு அதனைக் கொண்டு அகப்பை சீவி செதுக்கி எடுக்கும்
கத்தியிடம் நாம் கற்றது ஒன்று ஆனால் ஆக்கல் ,அழித்தல் எனக்கண்டது இரண்டு;

மதுரையை எரித்தவளின் ஆயுதம் கற்பு; அறிவியல் கண்டுபிடிக்கவில்லை என்றாலும்
கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய கருவிகளில் கற்பு
என்பதும் ஒன்று- அதனிடமிருந்தும் ஆக்கல் ,அழித்தல் எனக்கண்டது இரண்டு;

திருடனும் தீவிரவாதியும் தண்டிக்கப்படக் கூடாது
அவர்களின் மூளைக்குள் மறைத்துவைக்கப்பட்ட அறிவானது துண்டிக்கப்பட்டிருக்கவேண்டும்,

கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய கருவிகளில் அறிவு
என்பதும் ஒன்று- அதனிடமிருந்தும் ஆக்கல் ,அழித்தல் எனக்கண்டது இரண்டு;

யாரின் உயிரை எடுக்கிறோம் என்பதை
வாட்களும், துப்பாக்கிகளும் அறியாது;
அதை மறைத்து வைக்கப்பட்ட கருவியில் ஒன்றான
"போருக்கான காரணம்" என்ற கருவி அறியும்;

நிறைய கற்பழிப்புகளுக்குப் பின் மதுவும்
நிறைய கள்ளத்தொடர்புகளுக்குப் பின் காமமும்
மறைத்துவைக்கப்பட்ட கருவியாய் இருக்கிறது;

சாக்ரடீசிற்கு கொடுக்கப்பட்ட விஷம்
கண்ணுக்குத் தெரிந்த கருவியாகவும்
கொடுத்தவர்களது "அறியாமை"
மறைத்து வைக்கப்பட்ட கருவியாகவும் மனதில் படுகிறது;
இப்படியாக மறைத்து வைக்கப்படும் கருவிகள்
எல்லோர் கண்களுக்கும் தெரிவதில்லை
வெளிச்சம் காட்டினால் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது

Ω

@2020,All Rights Reserved To Author

# பூமியா சொர்க்கம்?



பூமியா சொர்க்கம்?
மனிதர்கள் வாழும் இந்த
பூமி ஒரு நரகம்.

திரும்பும் திசையெல்லாம் கேடும் நாசமும்
கெட்ட புத்தி மனிதனும்..
பிறன்பொருளை கள்வத்தால் கள்வோம் என்று
உள்ளத்தால் உள்ளியவர்கள்;.
அறம் செய்ய மறந்தவர்கள்;
பிறன்மனைக் கவர்ந்தவர்கள்;
பெண்ணை வைத்துச் சூதாடியவர்கள்;
கற்பெனப்படுவதை இரு கட்சிக்கும் நடுவில் வைக்காதவர்கள்;

மாமிசம் தின்னும்பழக்கத்தை சிங்கத்திடமிருந்து எடுத்துக்கொண்டு
நன்றியுணர்ச்சியை நாயிடமிருந்து கற்க மறந்தவர்கள்;

தெரிந்தகாலம் தொட்டு தென்னையின் பிள்ளைகள்
இள நீர்தான் தருகிறது...அதனை எல்லாக் காலத்திலும் அறுதியிட்டுச் சொல்லலாம்.
தாவரத்தின் எச்சங்களில் மாற்றம் ஏதுமில்லை;

பசித்து,வலித்து,வெம்பி,ஏங்கி,
கோபப்பட்டு,அழுது,ஏமாந்து,ஏமாற்றி ,
ஆசைப்பட்டு,அல்லல்பட்டு
நரைகூடி கிழப்பருவம் எய்தி சாகும்
இவர்களது எச்சங்களினை நம்பவேண்டாம் என்று
எல்லாக் காலத்திலும் அறுதியிட்டுச் சொல்லலாம்.
எனவேதான் எழுதவேண்டியுள்ளது
பூமியா சொர்க்கம்? மனிதர்கள் வாழும் இந்த
பூமி ஒரு நரகமென்று.. Ω

@2020,All Rights Reserved To Author

## அவற்றில் ஒன்று கெட்ட நேரம்



ஒரு காற்றடிக்கும்போது உதிரும் பூக்கள்
கெட்ட நேரத்தில் பூத்தவையல்ல;

திரிகள் தீயில் எரிந்து கருகுவதும்
நதிகள் கரையை உடைத்துப் பொங்குவதும்
கெட்ட  நேரத்தின் விளைவல்ல;

நேரம் தன்னை அழுக்காக்கிக் கொள்வதோ,
அடுத்தவனுடன் , அடுத்தவளுடன்
முறையற்று முயங்குதல் செய்வதோ,
களவாடி உண்பதுவோ,
கொலை பாதகம் செய்வதோ கிடையாது;
பின் எதற்கு அதற்கு கெட்ட நேரம் எனப்
பெயரிடவேண்டும்?

போராடவும், இரை தேடவும் , புசிக்கவும்
புணரவும், சந்ததி காக்கவும், பின்
வாழ்க்கை முடிவில் இறக்கவும் மட்டிலுமே பயின்ற
விலங்குகளின் வாழ்வில் நேரம் என்பது
கெட்ட நேரம் என்று ஆகுபெயராகவில்லை....காரணம்
அங்கு மொழியில்லை;

செயல்கள் செய்யப்படும்போது தனது தவறுகளை
தருமன் காலம் தொட்டு கதையில்கூட மனித மூளை
ஒத்துக்கொள்வதில்லை..
செயலின் முடிவு தவறாகிவிட்டால்
அதை மற்றவற்றின்மீது திணிக்கின்ற முயற்சியில்
மனித மூளை ஜெயிக்கும்-அப்போது சில வார்த்தைகள் உதிர்க்கும்
அவற்றில் ஒன்று கெட்ட நேர,ம் என்பது.**Ω**

@2020,All Rights Reserved To Author

# தெரு நாய்கள்



கிராமத்தில் எல்லா தெருவிலும் நாய்களுண்டு;
அசையாசொத்துக்க்களை நம்பியுள்ளவர்கள்
அதிகம் நாய் வளர்ப்பதில்லை;

சில நாய்கள் திருடன் வந்தால் குரைக்கும்
சில வீட்டிற்கு புதியவர்கள் வந்தால் குரைக்கும்
சில நெடு நேரம் குரைக்கும் ; அந்த வீட்டில்
கறியோ , மீனோ அதிகம் அடிக்கடி தின்கிறார்கள்
என அர்த்தம் கொள்ளலாம்..

சில இருமுறை குரைத்துவிட்டு படுத்துக் கொள்ளும்
அதற்கு அங்கு சாப்பாடு சரிவர போடுவதில்லை
என அர்த்தம் கொள்ளலாம்..
நாய்கள் நல்லவர் கெட்டவர் அறியாதவை
பிஸ்கட் போட்டவரைக் கண்டால் வாலை ஆட்டும்.

தெரு நாய்களுக்கு ஒரு குணம் உண்டு-அவை
அடுத்தத் தெரு நாய்களை தன் தெருவிற்குள்
அனுமதிப்பதில்லை...குரைத்து துரத்திவிடும்;

மார்கழி மாத்த்தில் ஒரு பெண் நாயினை சுற்றி நிறைய தெரு நாய்கள் வட்டமிடும்;
தொடரும்; பின்னேஓடும்;வாலடி நுகரும்; அதிக தூரம் பெண் நாயும் ஓடும்...
ஒரு சில பின் தங்கிவிடும்;சிலவற்றை வலிய முரட்டு நாய் சண்டையிட்டுத் துரத்தி விடும்..
இறுதியில் வலிய முரட்டு நாய் ஜெயித்துப் புணரும்;
ஓடிவந்த மற்றவை தூரத்தில் நின்று வேடிக்கைபார்க்கும்;
பெண் நாய் பின்னே ஓடும்போதுமட்டும் தெரு நாய்கள் தன் தெருவின் எல்லை பதுகாப்பு
மற்றும் புனிதத்தினை மறந்துவிடும்;

பெமோலியன் நாய்கள் காரில் செல்லும் தெரு தாண்டி, ஊர் தாண்டி, நாடு கூட தாண்டிப் போகும்
அவற்றிற்கு ஆங்கிலம் கூட தெரியும்; அவை தன் தெருவில் வரும் பெமோலியன் நாய்களை தடுப்பதில்லை
கண்டுகொள்வதில்லை...அவற்றை காலா காலத்தில் வளர்ப்பவர்களே இணை சேர்த்துவிடுகிறார்கள்
எனவே அவை உணவு, கலவி இப்படி எதற்கும் போராடுவதில்லை.....

நான் இதுவரை நாய்களைப் பற்றிதான் எழுதியுளேன் என
நீங்கள் நம்ப வேண்டும். **Ω**

@2020,All Rights Reserved To Author

## மழை வர வைக்கும் கற்பு (பக்கம்-1)



கற்பென்ற வார்த்தை பெண் பாலினத்துக்குமட்டுமென
மாற்றப்பட்ட அகராதிகள் எதுவும் என் ஆராய்ச்சியில்
அறியப்படவில்லை- எனினும் அப்படி
எப்போதோ நடந்துள்ளது.

கற்பென்பது உடலுறவு குறித்த விஷயமல்ல;
ஆனால் பாருங்கள் பருத்திச் செடியிலிருந்து
பஞ்செடுத்து நூலாக்கி ஆடை நெய்வதென்பது ஆடை தோன்றிய காலம் முதல்
அப்படியேதான் உள்ளது.
கற்பென்பது உடலுறவு குறித்த விஷயமாக மாறிவிட்டது;

"ஒரு சரியான செயல்முறை" என்பதன் மறு பெயர்தான் "கற்பு"

உணவில் உப்பு கலப்பது சரியான செயல்முறை
விஷம் கலப்பது என்பது வேறுபட்டது ;
உண்டவன் செத்ததற்குக் காரணம் விஷம் என்பதைவிட
விஷம் கலந்தவனின் எண்ண அலைவரிசை என்று கொள்க.

மழை நீர் புவி வந்து ,கடல் சேர்ந்து மறுபடி ஆவியாகி
கருமேகமாய் கருவுற்று மரம் தந்த குளிர் காற்றால்
மறுபடி மழையாகி…புவி வருதல் ஒரு சுழற்சி
மழை பெய்தல் என்பதுவும் சரியான செயல்முறை

மரத்திற்கும் மழைக்கும் காலம் காலமாய் இருக்கும் கள்ளத்தொடர்பினை
பாலைவனங்கள் பளிச்சென சொல்லும்…
அதுவும் அறிவியலோடு ஒத்துபோன ஒரு அலைவரிசைதான்…

ஒரு திடப்பொருளும் தக்க மின்னூட்டமும் இணைந்ததே
ஒரு உயிர் பொருள்; பெண் ஒரு மின்னூட்டம்
பெண் தனக்குத் தக்கத் துணையோடு
எண்ணத்தால் இணைவதென்பது ஒரு சரியான செயல்முறை

@2020,All Rights Reserved To Author



அந்தக்கலவிக்குப் பின்னால்வரும் கண்ணுக்குத்
தெரியாத விளைவுகள் என்பதும் ஒரு
அலைவரிசைதான்.

ஏதேனும் ஒரு துணைதான் பெண் தேடுமேயொழிய
எல்லாத் துணையும் தேடும்படிக்கு அது
படைக்கப்படவில்லை

கற்பென்பது ஆண் உடலுக்கும் பெண் உடலுக்கும்
இடைப்பட்ட தீண்டலில் இல்லை.
பெண் என்பவள் எண்ணத்தில் இருக்கிறது ; எண்ணம் என்பதும் ஒரு அலைவரிசைதான்

கண்டறியப்படும்வரை அக்ச்சிகவப்புக்கதிர்
வை-ாைபை ,பு ளுடுத் யாவும்  இங்கு இருந்துகொண்டுதானிருந்தது ;
அறிவியல் தற்போதுதான் கண்டரிந்து பெயரிட்டுள்ளது;
எனவே எதுவும் கண்டறியப்படவில்லை என்பதால் அவை இல்லை என்றாகாது.

கற்புக்கும், மழைக்கும், பெண்ணுக்கும், எண்ணத்திற்கும்
உலக நன்மைக்கும் இடையே உள்ள ஒரு "வஸ்து" இன்னும்
கண்டறியப்படவில்லையெனினும்
அடித்துச்சொல்லலாம் அப்படி ஒன்று இருக்கிறதென்று.
இதையெல்லாம் சோதித்துப் பார்க்க
மாற்றானை நி.னைக்காத பெண்ணும் ;
மாற்றாளை நினைக்காத ஆணும் தேவை.
அநேகமான பேர் உள்ளத்தால் உள்ளலும் தீதே
என்று படித்தவர்கள்தாம்! எனவே தேடினால் கிடைக்கலாம்....

கற்பென்ற வார்த்தை பெண் பாலினத்துக்குமட்டுமென
மாற்றப்பட்ட அகராதிகள் எதுவும் என் ஆராய்ச்சியில்
அறியப்படவில்லை; எனினும் அப்படி எப்போதோ நடந்துள்ளது.

"ஒரு சரியான செயல்முறை" என்பதன்
மறு பெயர்தான் "கற்பு"

Ω

@2020,All Rights Reserved To Author

## மனிதரைப் படிப்போம்



யாரேனும் ரகசியம் சொல்கிறேன் என்றால்
அது பொய்யென அர்த்தம்;
காக்கப்படுவது மட்டுமே ரகசியம்
வெளியிடப்படுவது செய்தி!

கோபம் பழிவாங்க மட்டுமே சொல்லும்;
சமதானமாய்ப் பொய்விடலாம் என்றால்
அது சிறு பிணக்கு அல்லது ஊடல்!

குறித்த இடத்திற்கு குறித்த நேரத்திற்கு
பத்து நிமிடம் முன்பே ஒரு
காதலனும் காதலியும் வந்துவிட்டால்
அவர்கள் நிஜமாலுமே காதலிக்கின்றனர்
என்று அர்த்தம்-ஏனெனில்
தவிப்பு என்பது இரு தராசு தட்டிலும்
சமமாக இருப்பின் அது போலிக்
காதலாக இருக்க வாய்ப்பில்லை;

இந்த உணவுக்கு பதில் வேறு உணவு
உண் என்பது சரியான மருத்துவம் இல்லை
எந்த உணவினையும் அளவாக உண் என்பது
அழகான மருத்துவம்;

கனவில் கூட படுக்கை அறையில் வைத்துப்
பார்க்க முடியாத ஒரு பெண்ணை அவன் தோழி எனவும்
கனவில் கூட படுக்கை அறையில் வைத்துப்
பார்க்க முடியாத ஒரு ஆணை அவள் நண்பன் எனவும் வைக்க வேண்டும்;

இவளோடு முயங்க வேண்டும் என எண்ண வைப்பது காமம்;
இவளோடு வாழவேண்டுமென எண்ண வைப்பது காதல்!

எல்லோரும் போலீஸ்காரர்களாக இருந்துவிட்டால்
யார் திருடனாக இருப்பது என்ற கேள்விக்கு பதில் இன்றிதான்
ஜாதி ஒழிக்கப்படாமல் கிடக்கிறது.
என் நண்பனுக்கு இந்த நேரத்தில் இது தேவை
என நான் அறிந்து வைத்திருகின்றபடியால்
எனக்கு என்ன தேவை எப்போது தேவை என நான் கவலைப்படுவதில்லை!

Ω

@2020,All Rights Reserved To Author

# உயிர்

உயிர் என்பது பூமிக்கு மட்டும்
சொந்தமான மின்சாரம்.
அது இங்கு இருந்துகொண்டிருக்கிறது.
காற்று மூலக்கூறுகளில் அது
பின்னலிடப்பட்டிருக்கிறது.

உயிரினத்தில் சுவாசமும் ரத்தமும்
ஒவ்வொரு வினாடிக்கும் முத்தமிட்டுகொள்கிறது
ரத்தம் விந்தென உருமாற்றம் செய்யப்படும்போது
உயிரும் அதனூடே இடமாற்றம் செய்கிறது.

உயிர் என்பதை பினொரு நாளில்
அறிவியல் பிரித்தெடுக்கும்-அதில்
கால் பங்கு நீரும்,கால் பங்கு காற்றும்
கால் பாகம் வெப்பமும் எஞ்சியதில் வெற்றிடமும்
இணைக்கப்பட்டிருக்கும்;
உயிர்கள் புணர்ந்திடும்போது முன்சொன்ன
முக்கால் பாகமும் ஒரு முணகலும் வெளிப்படும் இந்த
நிதர்சனம் அனுபவித்தோர் அறிவர்.

உயிர் எடுக்கப்படுவதோ கொடுக்கப்படுவதோ இல்லை
உயிர் என்பது விதைக்குள்ளும் சதைக்குள்ளும் செலுத்தப்பட்டு
வீரியம் கொண்டவுடன் வெளிவர முயல்வது.

வலி என்பது உயிர் வருவதற்கும் போவதற்குமான
பொதுவான வழி! எனவேதான் நீ
உலகிற்கு வரும்போது உன் தாயிற்கு வலிக்கும்
உலகுவிட்டு போகும்போது உனக்கு வலிக்கும்!

உயிர் போகுதே என கவலைப்பட வேண்டாம்
அது இங்குதான் இருக்கிறது!
பத்து மின்கம்பங்களில் ஒரு விளக்கு எரியாமல்
அணையும்போது ,மேலே ஓடிக்கொண்டிருக்கிற
மின்சாரத்தை மாற்றவேண்டியிருக்காது;
வேறு விளக்கினை மாற்றினால் போதும் அந்த விளக்கு உன் பிள்ளை!
உயிர் என்பது பூமிக்கு மட்டும்
சொந்தமான மின்சாரம்...

அது இங்கு இருந்துகொண்டிதானிருக்கிறது.Ω

@2020,All Rights Reserved To Author

# சாதியெனும் வாசனைகள்...



ஒரு சிறிய பூ கிழக்குப் பக்க காம்பிலும்
மற்றொன்று மேற்குப் பக்க காம்பிலும் பூத்திருந்தது
ஒரு காலைப் பொழுதில் செடி
தன்மீது இருந்த பனியினை
துவட்டிக் கொண்டிருந்தபோது
காற்றோடு முயங்கிகொண்டிருந்த
இரு பூக்களுமே காணாமல் போயின..

பிணத்திற்கு சூட்டப்பட்ட மாலையில் பெரிய பூவும்
கோயில் சிலைக்கு சூட்டிய மாலையில் சின்ன பூவும் இருந்து
பின் உதிர்ந்தன..

சில மணி நேரம் கழித்து காற்று சுழன்றடித்தபோது மாலைகளிருந்து மறுபடி உதிர்ந்த
பூக்கள் இரண்டும் எங்கிருந்தோ புரண்டு ,பறந்து
அம்மா செடியை பார்க்க ஆவலாய் வந்தன...

வரும் வழியில் அதே பழைய காற்றுடன்
கொஞ்சம் முயங்கி சல்லாபித்தன..
பூக்களின் மீதிருந்த பினவாடையினையும்,
கர்ப்பூர வாடையினையும் முயங்கி முடித்த காற்று தன்னோடு
இழுத்துக்கொண்டு போயிற்று...

செடியை கண்ட பூக்கள் கட்டிபிடித்து கண்ணீர் விட்டன...
எங்கே போயிருந்தீர்கள் என்ற செடியிடம்
சாமிக்கும் பிணத்திற்கும் தாம் மாலையாய் மாறியதை சொல்லி முடித்தன பூக்கள்;

செடியின் காம்புடன் மறுபடி சேர முடியாத
சோகத்தில் தரையிலேயே கிடந்தன...பின்பு செடி
தன் அனைத்துப் பூக்களையும் காற்றின் உதவியொடு
உதிர்த்துவிட்டது தரையில்...!

யாரோ பூப்பரிக்க வந்தர்வர்கள் செடியில் பூ ஏதும் இல்லாததால்
கீழே கிடந்த அத்தனைப் பூக்களையும் அள்ளிச் சென்று மாலையாக்கினார்கள்..

எல்லவற்றையும் கோவிலுக்கு எடுத்துச் சென்றார்கள்
எது பிணத்தின்மீது இருந்து பூ என்பது
யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை Ω

@2020,All Rights Reserved To Author

கடவுளைப் பற்றி தெரிந்தவரைச்
சொல்லவேண்டியிருக்கிறது.



கடவுளை வேண்ட வேண்டிய சூழலும்
கடவுள் தேவையில்லை என்ற சூழலும்
அதிகமாகவே இருக்கிறது பூமியில்.

கடவுள் ஆண்பாலில்லை;
கடவுள் பெண்பாலில்லை;
அது பலவின்பாலுமில்லை.

இந்த பூட்டை வேறு சாவி போட்டு
திறந்துவிடக்கூடாது என்று பூட்டு செய்பவன் கொள்கிற கவலைகூடவா
கடவுளிடம் இருந்திருக்காது?
தன்னைப் பற்றிய ரகசியத்தை கடவுள்
மனித மூளைக்கு எட்டும்படி வைத்திருக்க வாய்ப்பில்லை..

வலி,காமம்,கோபம்,சந்தோஷம்,அன்பு இப்படி உணர்வு
கடவுளுக்கு இருக்க முடியாது;அப்படி இருந்திருந்தால்
ஏதேனும் ஒரு வலியினால் கோபம்கொண்டு
தான் படைத்த உலகை இந்நேரம் அழித்திருக்கும்;

கடவுள்கள் காமம் கொண்டிருந்தால் இந்நேரம்
நிறைய கடவுள்கள் மனிதர்களது மக்கட்தொகையுடன் இருக்கும்;

கடவுளுக்கு அன்பிருப்பது உண்மை எனில்
மனிதர்களுக்கு மரணம் இருக்க வாய்ப்பில்லை;

ஆக்கல்,அளித்தல்,அழித்தல்
கடவுள் முடிவாக இருக்க முடியாது.-காரணம்
இறுதியாக அழிக்க வேண்டும் என்று
ஒரு பொருளை எதற்கு கடவுள் கஷ்டப்பட்டு ஆக்கவேண்டும்?

@2020,All Rights Reserved To Author

## கடவுள்: சிறுகுறிப்பு வரைக.(பக்கம்-1)



ஒரு விதை மூலம் மரம் உருவாக்கப்பட்டது;
ஒரு ஆணும் பெண்ணும் இனைந்து குழந்தை பெற்றனர்;
ஒரு தச்சன் நாற்காலி செய்தான்...
ஒரு கிளியும் கிளியும் சேர்ந்து குஞ்சு பொறித்தன;
எல்லாவற்றிற்கும் ஒரு மூலம் தேவை என்று
மனித மூளைக்குள் சில மரபணுக்கள் பதிந்துவிட்டது;

அதுவே கடவுளை ஆணாய், பெண்ணாய், ஒளியாய்,ஒலியாய்
இன்னும் பலவாய் பாவிக்கிறது;

சில கேள்விகளுக்கு பதில் இல்லாமையால்
பூமியில் கடவுள்கள் உலவுகின்றன இன்னமும்!

நீண்டு போகிறது கடவுள் கதை;
நான் முடிவு சொல்லியாகவேண்டும்;
வெறும் கவிதை எழுதும் ஒரு மனிதனால்
எப்படி கடவுள் யாரென்று சொல்லிடமுடியும்?

வேண்டுமானால் அது நச்சும் எதிர் நச்சும் கலந்த
எல்லைகளற்ற ஒரு மாய வளையம்
என்று எடுத்துக்கொள்;
நச்சில் நன்மை இருக்கிறது; நன்மையில் நச்சும் இருக்கிறது.

அதற்கு நீ கடவுள் என்று
பெயரிட்டதுகூட எலக்ட்ரான்களின் ஓட்டத்திற்கும்
புரோட்டான்களின் ஓட்டத்திற்கும் "மின்சாரம்" என
பெயரிட்டது போல ஒரு சாதாரண நிகழ்வுதான்.

Ω

@2020,All Rights Reserved To Author

## கடவுள் உண்டென்றுதான் சொல்லுகிறேன் ..



*ஏன் பூமியில் மட்டும் கடவுள் கடவுள் என்று சப்தங்கள் ?

*உண்ண உணவு ,உடுக்க உடை ,இருக்க இடம்,சுவாசிக்க காற்று எல்லாமே கடவுளுக்கும் தேவை படுகிறதா?

அல்லது எல்லாமே கடவுளுக்கும் தேவை பட்டதா?

மனிதரிடமிருந்து அது எப்படி வித்தியாசப்படுகிறது ?

யுரேனஸ் ,நெப்டியூன் ,புளுட்டோ இங்கெல்லாம் கடவுளாகிய நீ ஆடு மேய்க்கவோ ,சந்தணம் பூசிக்கொள்ளவோ ,குருஷேத்திர யுத்தத்திற்கோ போகவில்லையா? கடவுளே உன் ராஜ்ஜியத்தின் எல்லை பூமிமட்டும்தானா ?

வி ஐ பி டோக்கன் வாங்கி முதலில் வரிசையில் நின்று

உண்டியலில் அதிகம் பணம் போடும் மனிதர்க்கு மட்டும் நீ நிறைய அருள் செய்கிறாயா?

*சரி.எங்கள் இப்போதைய துயரத்திற்குக் காரணம் முன் பிறவி பயன் என்றால், கடவுள் நீ முன் பிறவியில் இல்லையா? இருந்தும் ஏன் நாங்கள் செய்த பாவங்களை அப்போதே நீ தடுக்கவில்லை? ஏன் இழுத்தடித்து இந்த பிறவியில் தண்டனை ???

சிரித்தல்,அழுதல் ,நடத்தல் போல வணங்குதல் என்பதும் ஒரு மனிதகுணம் .

*எதிர்பார்ப்பு ஏதும் அற்ற கடவுளாகிய நீ வணங்குதலுக்கு எப்படி மயங்குகிறாய்?

ஏதோ ஒரு நூற்றாண்டில் கண்,காது,மூக்கு வைத்து எவனோ ஒரு ஓவியன் வரைந்த கடவுளின் படங்கள் அழகானவைதான் ஆனாலும் அந்த படங்களை நம்பியா என் பயணம் தொடர்வது?

*நிறைய பூக்கள், , நிறைய பறவைகள் ..நிறைய விலங்குகள் ..நிறைய கடவுள்கள்....

பல அவதாரங்கள் எடுத்து,மகான்களை அனுப்பி,மனிதனை .திருத்தி....ஏன் இந்த வேலை? பிழையற ஒரு நிரல் எழுதி ,உலக கணிப்பொறியில் உள்ளீடு செய்ய தெரியாத மென்பொருள் வல்லுனனா கடவுள் எனும் நீ?

காக்கை குருவி எறும்பு யாவும் தாமக்கு தாமே கூடு கட்டிக்கொள்ள ,...

மனிதன் காசு போட்டு கடவுள் உனக்கு வீடு காட்டுவதால்...எங்கள் பொருளாதார பூக்கள் கொசுக்கடியால் தூக்கமின்றி....இங்கு.

*கடவுள் உண்டென்றுதான் சொல்லுகிறேன். அவன் வரும்போது வரட்டும் பூமிக்கு...

நமது பாவ புண்ணிய கணக்கை பார்க்கட்டும்.. .என்ன செய்துவிட போகிறான் ?

ஏதுமற்று நாம் எல்லாவற்றிற்கும் ஏங்கி செத்ததுபோன பின்பு?

Ω

@2020,All Rights Reserved To Author

# பொருள்



தோட்டத்து வாழைமரங்களும்
பூச்செடிகளும் நீர் கேட்பதுவும்
ஆடுகளும் மாடுகளும் புல் கேட்பதும்
பண்டமாற்று முறையின் வேறு பரிமாணம்!

சூரியனைத் தெரியுமா உங்களுக்கு?
கடலிடமிருந்து கடன் வாங்கி
வானுக்கு வரதட்சணை தந்து விவாகம் முடித்துதான்
மேகத்தினை மேலே மிதக்கவிட்டுள்ளது...

பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை;
உலகில் தொண்ணூறு சதவீத வஸ்துகளை
பணம் வென்றுவிடும்;
மீதமுள்ள பத்து சதவீதம்கூட இந்த
பண்டமாற்றுக்குள் அடங்கிவிடும்,;

அறம் செய்ய விரும்புகிறாயோ இல்லையோ
முதலில் பணம் செய்ய விரும்பு ;

பொருள் கொண்டவன் தனியே விம்மி அழுவதில்லை ;
பொருள் இல்லாதவனுக்கு முத்தங்கள் இல்லை ;

சிலர் கைதட்டுகிறார்கள் என்பதற்காக
கோட்பாடுகளையும் ,தத்துவங்களையும்
கோவணமாகக் கட்டிக்கொண்டு அலையாதே ;
அப்படி செய்த ஒரு சிலர்தான்
பணம் செய்துள்ளனர். அதுவும் அதிர்ஷ்டவசமாக !

மானத்தைத் தவிர மற்ற அனைத்தையும் விற்றுக்கொள்;
கடப்பாறையும் , மண்வெட்டியும் எடுத்துக் கொள்;
உன் கனவுகள் மெய்ப்பட காசு நிறைய வேண்டும்...
பொருளைக் காதலி ; பின் காதலி உட்பட யாவராலும் காதலிக்கப்படுவாய்....! Ω

@2020,All Rights Reserved To Author

# பொருளாதாரச் சமநிலை



மேடும் பள்ளமும் நியதி என்றனர்;
சமமாக இருப்பதில் இறைவனுக்கு
உடன்பாடில்லை இருந்திருப்பின் பூமி
தட்டையாகப் படைக்கப்பட்டிருக்கும் என்றனர்;

முதலாளி , தொழிலாளி ,
ஏழை, பணக்காரன் இப்படி ஏற்றத்தாழ்வுகள் சரி என்றனர்.
சம அளவு எடையுடன் எந்தப் பொருளும்
படைக்கப்படவில்லை என்றனர்;

எல்லோரிடமும் பணம் இருந்தால்
யார் பிணம் எரிப்பது? யார் சாக்கடை அள்ளுவது ? அனைவரும்
கோடீஸ்வரனாகிவிட்டால் பின் கூலி வேலைக்கு
ஆளிருக்காது என்றனர்;

அவர்கள் சொன்னது சரியெனப்பட்டது அந்த வயதில் எனக்கு !
காரணம் என் கவனமெல்லாம் அந்தக் கூட்டத்தில்
சற்று அழகாய் இருப்பவள் மேல் இருந்தது..-அவள்
கம்யூனிசக் கொடியினைவிட சற்று சிவப்பாய் இருந்தாள்..-எனவே
விடலை பருவத்தில் என் கவனம் லெனின் காரல் மார்க்ஸ்
புத்தகங்களில் இல்லை ; பெண்களை வருணித்துப் பாட்டுவரும்
வார இதழ் மீதும் மாத இதழ் மீதும் இருந்தது ;

இருந்தாலும் ஒரு ரூபாய் காசு என்பதில்
இரண்டு ஐம்பது பைசா இருந்தது என்னில் உறுத்தியது;
நாம் நினைத்தால் எல்லாவற்றினையுமே
பிரித்து எல்லோருக்குமே தர வாய்ப்பிருக்கிறது என மனம் படுத்தியது.-காரணம்

பூமி சூரியனை ஒரு நீள் வட்டத்தில் மிகச் சரியாக சுற்றுகிறது;
கடிகார முற்கள் ஒரு வட்டதிற்குள் மிகச் சரியாக சுற்றுகிறது;
ஒரு பழத்தில் எந்தப் பக்கதினைக் கடித்தாலும் இனிக்கிறது;
படைப்பில் சமம் இருக்கிறது ; மனித மூளையில்தான் மேடுகளும் பள்ளங்களும்! Ω

@2020,All Rights Reserved To Author

# எண்ண அலைவரிசை

(ஒரு கதை- கவிதை நடையில்)



ஒரு தொழில் நுட்பகோளாறு நிமித்தம்
உன்னைத் தொலைபேசி வழியே சந்திக்க
நேரிட்டது...

முதலில் வினாக்குறியாய் தெரிந்த நீ பிறகு
வியப்புக்குறியாய் மாறி பின் என் தேடலின் முற்றுப்புள்ளியானாய்...

அதன் பின்  நீ என்னை அழைக்கவும் , நான் உன்னை அழைக்கவும்
ஒரு இம்மியளவு நேரம்கூட பிசகாமல் அலைபேசியை அழுத்த
ஒரே நேரத்தில் புறப்பட்டு நேரெதிரே மோதிக்கொண்டு
காற்று அலைவரிசை இறந்து போக  “ தொடர்பு எல்லைக்கு அப்பால்” இருப்பதாக
இருவருக்குமே பதில் வந்தது....

நீயும் பேர் மாற்றிச் சொல்ல , நானும் என் பேர் மாற்றிச்சொல்ல
என் அலுவலகம் நீ வந்து , உன் அலுவலகம் நான் வந்து
இல்லாத பேர் சொல்லி தேடத் தொடங்கினோம்....
விடுமுறையில் இருந்ததனால் “அப்படி யாரும் இல்லை”  என்றே
அங்கிருந்தும் பதில் வந்தது ;

பிறகு கோபப்பட்டு உன் அலைபசியிலிருந்து என் எண்ணை
நீ அழித்துவிட , நானும் உன் எண்ணை அழித்தாகிவிட்டது..
காற்று அலைவரிசைக்கு மட்டும் தெரிந்த இந்த நம் காதல்...
எண்ண அலைவரிசை என்பது நம்மை  இணைத்தது ; அதுவே பிறகு பிரித்தது ;

இப்போது கூட நீ எங்கோ என்னை ஒரு கூட்டத்தில் தேடிக்கொண்டிருக்க
நானும் உன்னைத் தேடிக்கொண்டிருக்கிறேன்...
பெயரில் கூட பொய் சொன்னதற்கு தண்டணையாய்–இனி
நேருக்கு நேர் நாம் சந்தித்தால்கூட இணைவதற்கு வாய்ப்பில்லை...Ω

@2020,All Rights Reserved To Author

## பெண் சக்தி



உலகில் தோன்றியது நீ தான் பெண்ணே முதன் முதலில்
உன்னை ஒளித்து வைத்தார்கள் இருண்ட வேதத்து பாழ் நிழலில்-பின்பு
பெண்ணுரிமை வந்தது ஒரு பெரியவரின் புது வழியில்
உன்னைப் பற்றிச் சொல்லுகிறேன் நம்முடைய செந்தமிழில்!!

ஆயுதங்கள் எடுத்து நிற்கும் தமிழினத்துக் காளி தெய்வம்-தீமைகளை
வேயும் அந்தத் திருவுருவ பிம்பம்தான் உன் மெய்யும்!
இப்போதும் வைத்துக்கொள் எப்போதும் ஆயுதத்தை-உன்
கற்பினுக்கு பங்கம் வந்தால் கணவனையும் வெட்டிக் கொல்!

சுட்டெரிக்கும் சூரியனும் ஒளியெரிக்கும் சந்திரனும் தரும்
கதிரனைத்தும் ஆண்மை எனில் அவை கனன்றெடுக்கும் ஆற்றல் அது
கன்னிப் பெண்ணினத்துப் பொருள் அல்லவா -தீக்குள்ளும்
பெண்மை உண்டு அது தெரியாத கதையல்லவா?

நீயல்லவா புவிப்பாடு ? நீயல்லவா புறப்பாடு?
நீயல்லவா நீரூற்று ? நீயல்லவா பெருங்காற்று? ஏ....
சூலகம் தாங்கிய வேலக நங்கையே -பழைய கதைகள் பரண்கட்டிப்போடு
பூவுலகம் யாவும் பெண்மையின் ஆட்சியே - நீ கரம்தட்டிப்பாடு !

நதியென்பார்கள் வளையாதே ;
வெட்கம் வேறு ;விடுதலை வேறு; மருவாதே!
விதியென்றும் வெள்ளை உடையென்றும் தீட்டென்றும் திட்டும்
வார்த்தைக்குத் திகையாதே!

கதியுனக்கு ஆணல்ல; கற்கும் கல்வியது வீணல்ல;
வீடு விட்டு வீதிவந்தால் அழுகாதே!
சதியுடைத்து சாதனை செய் ;
பழம் சட்டத்தினை தீயினுள் வை! - முறங்கொண்டு
புலி விரட்டிய உன் முன்னோர்கள் சரித்திரத்தை
என்றைக்கும் மறவாதே! Ω

@2020,All Rights Reserved To Author



THANK YOU

# நன்றி

@2020,All Rights Reserved To Author

புத்தக விவரங்கள்

•

| | |
|---|---|
| **Title** | **Oru Melliya Theebaaraadhanai**<br>**ஒரு மெல்லிய தீபாராதனை** |
| **Type** | PuthukKavithaikal (Poems)<br>(புதுக்கவிதைகள்) |
| **Language** | Tamil (தமிழ்) |
| **Author** | Chandrasekaran Kamatchi M.C.A<br>சந்திரசேகரன் காமாட்சி M.C.A |
| **Copy Right** | All Rights Reserved to Author @2020—INCTN-027031972<br>பதிப்புரிமை @2020 (ஆசிரியர்க்கு) |
| **Address** | Ullikkottai village, Mannargudi City,<br>Thiruvarur District Tamilnadu , India.<br>உள்ளிக்கோட்டை, மன்னார்குடி,திருவாரூர் ,<br>தமிழ் நாடு,இந்தியா |
| **Email:** | chandru009@gmail.com |
| **Drawings & Picture** | Free licensed images from google |
| **Format** | Digital E book format (PDF) |
| **Permission** | citations & Quotes to other visual<br>media required Author's Permission |
| **Access Mode:** | Via Email or web Link |
| **Year** | Aug-2020 |
| **Edition** | First Digital Copy |
| **Price** | **INR . 50 /- ( Thirty Rupees Only)** |

*@2020,All Rights Reserved To Author*